பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி

Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | புரட்டாதி 19 | திங்கட்கிழமை | (06.10.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 291

# சமாதானப் பேச்சில் எமக்கு தனி இடம் இல்லையேல் அரசைக் கவிழ்ப்போம்!

## ஏறாவூரில் ஹிஸ்புல்லா எம்.பி.சூளுரை

(ஏறாவூர்)

வடக்கையும் கிழக்கையும் தனித் தனி மாகாணங்களாகப் பிரிப்பதனால் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் தீர்ந்து விடப்போவதில்லை. இந்த மாகாணப் பிரிப்பு என்பது மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனக்கோரிக்கைவிடுப்பதாகவே அமையும். அத்துடன் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்துவதாகவே கருதப்படும். இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணிப்பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா கூறினார்.

ஏறாவூர் நகரில் அந்நாஜாத் கழகத்தின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்ற பொதுக் கூட்டத்திலேயே உரையாற்றிய ஹிஸ்புல்லா எம்.பி. மேலும் பேசுகையில் கிழக்கு மாகாணத்தை தனியாகப் பிரிக்கும் கோரிக்கையினை மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் முன்வைக்கவில்லை. முஸ்லிம் சமூகத்தின் தனித்துவம் பேணக்கூடிய சுய நிர்ணய உரிமையுடனான முஸ்லிம் மாகாணம் வழங்கப்பட வேண்டும் என்பதையே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியது அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித் தரப்பாகப் பங்குபற்ற வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளோம். இந்த விடயத்தில் அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளோம்.

முஸ்லிம்கள் தனித்தரப்பாக ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் பேச்சுவார்த்தை இடம் பெறுவதை அனுமதிக்க மாட்டோம். அவ்வாறான பேச்சுவார்த்தையில் இந்த அரசாங்கமும் கலந்து கொள்ளக்கூடாதெனக் கேட்போம். அதையும் மீறி நடந்தால் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் அணி திரண்டு அலரி மாளிகையையும் முற்றுகையிடுவோம். இறுதியாக இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்கின்ற வரை போராட்டம் நடத்துவோம்.

வடக்கில் இருந்து கிழக்கு மாகாணத்தைப் பிரிக்க வேண்டுமாக இருந்தால் மறைந்த தலைவர் அஷ்ரப் தமக்கு இருந்த உச்சக் கட்டச் செல்வாக்கினைப் பயன்படுத்தி ஒரே இரவிற்குள் வர்த்தமானி அறிவித்தல் மூலமாகப் பிரித்திருக்கலாம். ஆனால் அதை அவர் செய்யவில்லை என்றார். (ந)

# அயர்லாந்து மாநாடு நேற்று ஆரம்பமாகியது

## திட்டவரைபு சட்டவல்லுநர்களால் ஆராய்வு

(டப்ளின்)

**தமிழீழ விடுதலைப் புலிகளினால் இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வடக்குக் கிழக்கு நிர்வாகசபை தொடர்பான திட்டவரைபிற்கு இறுதி வடிவம் கொடுக்கும் ஆலோசனைக் கூட்டம் அயர்லாந்தின் டப்ளின் நகரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் நேற்று ஆரம்பமாகியுள்ளது.**

வடக்குக்கிழக்கிற்கான இடைக் கால நிர்வாக சபை தொடர்பாக இலங்கை அரசு புலிகளிடம் சமர்ப்பித்திருந்த மூன்றாவது திட்ட வரைபிற்கு மாற்று யோசனைகள் அடங்கிய பதில் வரைபு ஒன்றை அரசிடம் சமர்ப்பிப்பதற்காக விடுதலைப் புலிகளின் சட்டவல்லுநர்களும், சர்வதேச சட்டவல்லுநர்களும் அண்மையில் பரிஸில் கூடித் தயாரித்திருந்தனர்.

பரிஸ் சட்டவரைபு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பின் அதற்கு இறுதி வடிவம் கொடுப்பதற்காக நேற்று அயர்லாந்தின் டப்ளின் நகரில் உள்ள உல்லாச விடுதியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் விடுதலைப் புலிகளின் சட்டவல்லுநர்களும் சர்வதேச சட்ட

(10ம் பக்கம் பார்க்க)

## பொது மக்கள் அகற்றக்கோரிய

# காவலரணைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் படையினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மடத்தடிச் சந்தியிலுள்ள இராணுவக் காவலரணைப் பலப்படுத்தும் முயற்சியில் படைத்தரப்பினர் நேற்று முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மடம் சந்தியில் இடம்பெற்ற இராணுவ வாகன விபத்தில் இளைஞர்கள் இருவர் பலியானதைத் தொடர்ந்து இரு தினங்களாக அப்பகுதியில் பொது மக்களுக்கும் படையினருக்கும் இடையே பெரும் மோதல்கள் இடம்பெற்றதுடன் படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

மேற்படி விபத்துககுக் காரணமெனக் கருதப்படும் இராணுவக் காவலரணை அகற்றக் கோரி பொது மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டுள்ள சூழ்நிலையில் அந்தக் காவலரணை மேலும் பலப்படுத்தும் நடவடிக்கையில் படைத்தரப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை மடத்தடிச்சந்தி, அதனை அண்டியுள்ள பிரதான வீதிச்சந்தி மற்றும் யாழ்.நகரின் பிரதான வீதிகளிலும்சந்திகளிலும் படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

படைத்தரப்பின் பாதுகாப்பு நடவடிக்கைகளினால் ஏற்படக் கூடிய விபரீதங்களை முன்னுணர்ந்து அதனைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் கண்காணிப்புக் குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (த-4)

## இராணுவபலம் குறைவடைகிறதாம்

# பாதுகாப்புச் சபையை அமைக்க அரசு சட்டவரைபை தயாரிக்கிறது

(கொழும்பு)

பாதுகாப்பு நிறுவனங்களைத் தமது கைக்குள் எடுத்துக் கொள்ள ஐ.தே.மு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.பாதுகாப்பு அமைச்சரின் கீழ் பாதுகாப்பு சபை ஒன்றை ஏற்படுத்தும் விதத்தில் புதிதாக உயர் பாதுகாப்புக் கட்டுப்பாட்டுச் சட்டவரைபு ஒன்று தயாரிக்கப்பட விருக்கின்றது. இந்தப் பாதுகாப்புச் சபையானது பாதுகாப்புக் கொள்கையை அமுல் செய்யவும்,முகாமைப்படுத்தவும் பயன்படுத்தப்படும்.தற்பொழுது இந்தப் பணிகள் பிரதம தளபதியான ஜனாதிபதியால் கவனிக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி சட்ட வரைபு ,அரசியல் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறவில்லை என்று அரசின் சட்டவல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.இதனால் முன்னுரிமை அடிப்படையில் இதற்கான சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.பாதுகாப்புப் படைகளின் தயார்நிலை படிப்படியாக குறைந்து செல்வதாக முறைப்பாடுகள் கிடைத்ததை அடுத்தே இவ்ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

இதேவேளை போர்நிறுத்தம் அமுலிலுள்ள காலங்களில் விட்டோடிகளின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது.ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் எதிர்பார்த்த பலன்களைத் தரவில்லை.இவற்றிற்கு மாறாக புலிகள் தமது இராணுவ ஏற்பாடுகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.ஆட்சேர்ப்பு ,பயிற்சி நடவடிக்கைகள் ,இராணுவ

(10ம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் நால்வர் நேற்று யாழ்-வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபடுவதற்குகென நான்கு புதிய கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மடம சந்தியில் இடம் பெற்ற இராணுவ வாகன விபத்தில் இளைஞர்கள் இருவர் பலியானதைத் தொடர்ந்து விபத்து நடந்த பகுதியிலும், கோண்டாவில் டிப்போ பகுதியிலும் ஆர்ப்பாட்டங்களும் படையினருடன் மோதல்களும் இடம் பெற்றன.

இதனால் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கண்காணிப்புக் குழுப் பிரதி நிதி மாறிமாறி இரண்டு இடத்திற்கும் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

இத்தகைய சிக்கல் நிலைமை தொடர்பாக யுத்த நிறுத்த கண்

(10ம் பக்கம் பார்க்க)

# ஐ.நாவில் பிரதமர் ஆற்றிய உரை ஜனாதிபதி விளக்கம் கோருவார்

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆற்றிய உரை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பிரதமரிடம் விளக்கம் கோருவதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் தொனியில் பிரதமரின் உரை அமைந்திருந்ததாக விமர்சனங்கள் எழுந்திருப்பதை அடுத்தே ஜனாதிபதி சநதிரிகா இத்தகைய முடிவுக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் ஐ.நா.பொதுச் சபை உரை இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை, அணிசேரா நாடுகளின் கொள்கைகளை மீறுவதாக அமைந்துள்ளதால் அது குறித்து ஆய்வு ஒன்றினை மேற்கொள்வதற்கு வெளிநாட்டுக்கொள்கை தொடர்பிலான சிரேஷ்ட ஆலோசகர்களுடன் ஆலோசனை நடத்தப்போவதாகவும் இது பற்றி விசாரிப்பதற்கு விசாரணைக் குழு ஒன்றை நியமிக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார். (வ)

## வல்வெட்டித்துறை தீருவிலில்

# பன்னிரு வேங்கைகளின் நினைவுத் தூபி திரைநீக்கம்

(பருத்தித்துறை)


விடுதலைப் புலிகளின் மூதத தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் நினைவுத் தூபி திரைநீக்க நிகழ்வு நேற்று மாலை 5 மணியளவில் வல்வெட்டித்துறை தீருவிலில் நடைபெற்றது.

பன்னிரு வேங்கைகளின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டதையடுத்து அத்தூபி மீண்டும் புனரமைக்கப்பட்டு அவர்களின் 16-ம் ஆண்டு நினைவு தினமான நேற்று திரைநீக்கம் செய்து வைக்கபட்டது.


இந் நிகழ்வில் பொதுச் சுடரினை

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்







யாழ்ப்பாணம் கன்னியர் மடம் சந்திப்பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள படையினரை முதலாவது படத்திலும், பிரதான வீதியில் காவலரண் ஊடாகச் செல்லும் முச்சக்கர வண்டிச் சாரதியைப் பொலிஸார் ஒருவர் விசாரணைக்குட்படுத்துவதை இரண்டாவது படத்திலும், கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவதற்காக நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ள கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளில் இருவரை மூன்றாவது படத்திலும் காணலாம். படங்கள்: பவன்

## ஓய்வு பெற்ற ஆசிரியர் கௌரவிப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கடந்த ஒரு வருடத்தினுள் ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தில் கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளது.

கோப்பாய் கோட்ட நிகழ்வுகள் கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியிலும், நல்லூர்க் கோட்ட நிகழ்வுகள் யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும், யாழ் கோட்ட நிகழ்வுகள் யாழ் மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுகள் அந்தந்தக் கோட்ட அதிபர் சங்கத் தலைவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வைத் தொடர்ந்து ஆசிரியர்களின் நாடகங்கள், பட்டிமன்றம் மற்றும் விசேட கலை நிகழ்வுகள் என்பன இடம் பெறவுள்ளது.

(ந-5)

## ஆசிரியர் தின விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச ஆசிரியர் தினம் நாளை செவ்வாய் கிழமை பி.ப.2.00மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் யாழ். மாவட்டத் தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் [illegible]ம்பெறவுள்ள இந் நிகழ்வில், யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம், கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, மற்றும் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் எஸ்.கவியன்பன் ஆகியோர் விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளனர்.

சங்கத்தினால் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட கால்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், சதுரங்கம் மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் இந் நிகழ்வில் வழங்கப்படவுள்ளன. (தி-18)

## மீளக்குடியேறியுள்ள மக்களுக்கு பட்டினிக்கெதிரான நிறுவனம் உதவி

(கல்வயல்)

தீவகத்தில் மீளக் குடியேறிய மக்களுக்கு பட்டினிக்கெதிரான நிறுவனம் பல உதவிகளை வழங்கி வருகின்றது.

மேற்படி பிரதேசத்திலுள்ள அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, பருத்தியடைப்பு, கரம்பன் கிழக்கு, மெலிஞ்சிமுனை, கரம்பன் மேற்கு, புளியங்கூடல், நாரந்தனை மற்றும் புங்குடுதீவு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக் குடியேறியுள்ள மக்களுக்கு அவரவர் செய்யும் தொழிலுக்கேற்ப தொழில் உபகரணங்களை பட்டினிக் கெதிரான நிறுவனம் வழங்கி வருகின்றது.

அத்துடன், மீளக் குடியேறியுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக, மேற்படி பகுதிகளில் உள்ள குடிநீர் கிணறுகளைப் புனரமைத்தல், முக்கியமான பொது இடங்களில் குடிநீர்த் தொட்டிகளை அமைத்தல் போன்ற பணிகளையும் இந் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

அதே சமயம் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள தெரிவு செய்யப்பட்ட விதவைகளுக்கு கால்நடை வளர்ப்புத் தொழில் முயற்சிக்காக கோழிக் குஞ்சு, கோழிக்கூடு மற்றும் நல்லின ஆடுகளையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(தி-111-12)

## மின்சாரம் தாக்கி இளைஞன் காயம்

(வண்ணார்பண்ணை)

வீட்டு மின்சுற்றில் ஏற்பட்ட கோளாறுகளைத் திருத்த முற்பட்ட இளைஞன் ஒருவனே மின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

அண்மையில் நாவலர் வீதி, கீரிப்பிள்ளையார் கோவிலடியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில், அதே இடத்தைச் சேர்ந்த எஸ். ஜெயசீலன் (வயது 30) என்னும் இளைஞனே காயமடைந்ததாகத் தெரியவருகிறது. (தி-91)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி நாளை செவ்வாய்க் கிழமை பி.ப.2.00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதாயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இப் போட்டியில் 14,16,18 மற்றும் 20 வயதிற்குட்பட்ட அணிகள் மோதவுள்ளன. (ந-5)


மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை

01.10.2003 முதல் 24.10.2003 வரை
தீபாவளியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

★ நவநாகரிக நங்கையர் விரும்பும் நவீன டிசைன் துணிவகைகள்
★ அழகுக்கு அழகூட்டும் சாறிவகைகள்
★ றெடிமெட் ஆடைத் தினிசுகள்
★ ஆடவர்க்கேற்ற சேட், சூட் வகைகள்

சகல பொருட்களுக்கும் விசேட கழிவு வழங்கப்படும்

ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றிட

லைடன் புடைவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 222 2381 (C-6723)

மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை

உங்கள் வலம்புரியின் வாரமலர்




சங்குநாதம்

- இடைக்கால வரைபு இறுதி வடிவம் பெறுகிறது.
- இராணுவ வாகனம் மோதி இளைஞர்கள் இருவர் பலி
- புலிகள் மீது மீண்டும் தடை அமெரிக்காவின் சதி அம்பலம்
- வியாசரின் பதில்கள்.
- பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00

சங்கு நாதம்

Sankunatham

(06-12 ஒக். 2003)

விலை ரூபா 14.00

# காஸாப் பகுதியில் இஸ்ரேலியர் ஹெலிகள் மூலம் கடும் தாக்குதல்

## தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு எதிர் நடவடிக்கை

(செல்அவில்)

பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியில் நேற்று அதிகாலை இரண்டு இஸ்ரேலிய ஹெலிகொப்ரர்கள ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டன.

இதனால் காஸா நகரின் மத்தியில் இருந்து பெரும் புகை மண்டலம் எழும்பியதாக தெரிவிக்கப்படுகிறது.

19 இஸ்ரேலியர்களைப் பலிகொண்ட தற்கொலைத் தாக்குதலையடுத்து அதற்கு எதிர் நடவடிக்கையாக இஸ்ரேலிய ஹெலிகொப்ரர்கள் இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டதாகத் தெரிகின்றது.

இஸ்லாமிய ஜிகாத் அமைப்பின் பெண் தற்கொலைப் போராளியொருவர் நேற்று முன்தினம் இஸ்ரேலின் ஹைபா நகரில் குண்டு ஒன்றை வெடிக்கச் செய்ததில் 19பேர் உயிரிழந்ததுடன் 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் பலஸ்தீன ஜனாதிபதி யஸீர் அரபாத்தின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக கருதப்படுகின்றது.

யஸீர் அரபாத் மீது இஸ்ரேல் திடீர்த் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.

இதே சமயம் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இக் குண்டுத் தாக்குதலை இஸ்ரேல் ஒரு காரணமாகச் சுட்டிக்காட்டி சர்வதேச சமாதானத் திட்டங்களுக்கு தடைவிதிக்குமென்று அரபாத் அறிக்கை ஒன்றில் அச்சம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பலஸ்தீனப் பகுதிகளில் இருந்து இஸ்ரேலியர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் இப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் நேற்று முன்தினம் 19பேரைப் பலிகொண்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலைக் காரணம் காட்டி இஸ்ரேல் பலஸ்தீனம் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காது இருக்க உலக நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் அரபாத் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (பி-2)

## ஜம்முவில் அதிரடி நடவடிக்கை
## 17 பயங்கரவாதிகள் சுட்டுக் கொலை

(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீரில் நேற்று முன்தினம் இந்தியப் பாதுகாப்புப் படையினரால் நடத்தப்பட்ட திடீர் நடவடிக்கையின் போது 17 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

பூஞ், பரமுல்லா, லோலாப் ஆகிய இடங்களில் 13 பயங்கரவாதிகளும் உதம்பூரில் 4 பயங்கரவாதிகளும் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் லக்ஷெறி தொய்பா. ஹிஸ்புல் முஜாகுதீன் ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் என இராணுவச் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த நடவடிக்கையின் போது இவர்களுடன் சேர்ந்த பயங்கரவாதிகள் பலர் காட்டுப் பகுதிகளில் ஒளிந்து கொண்டிருப்பதாகவும், அவர்களைத் தேடும் முயற்சியில் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனினும் கொல்லப்பட்ட பயங்கரவாதிகள் குறித்து அவர்களது அமைப்புக்கள் எந்த தகவலையும் இதுவரை வெளியிடவில்லை. (உ-2)

உலக தரிசனம்

## இத்தாலியின் தலைநகரில் குண்டுவெடிப்பு

(ரோம்)

இத்தாலியின் தலைநகரில் உள்ள தொழில் அமைச்சின் கட்டடத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் குண்டு ஒன்று வெடித்துள்ளது.

ரோமில் ஐரோப்பிய ஒன்றிய மாநாடு நடைபெறுவதற்கு இன்னும் சில நாட்கள் இருக்கும் நிலையில் இக் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இச் சம்பவத்தின் போது உயிரிழப்புக்களோ, சேதங்களோ ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, புதிய ஓய்வூதியத் திட்டத்தை இத்தாலியப் பிரதமர் அண்மையில் அறிவித்திருந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டனப்பேரணிகள் அங்கு நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தொழிற்சங்கங்கள் நாடளாவிய வேலைநிறுத்தம் ஒன்றிற்கும் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

## தாய்நாடுசெல்ல பாப்பரசர் விருப்பம்

(வத்திக்கான்)

கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கும் பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் தனது சொந்த நாடான போலந்திற்கு விஜயம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் தற்போது அங்கம் வகிக்கும் 25 நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ரோம் சென்றுள்ள போலந்துப் பிரதமர் தனிப்பட்ட முறையில் பாப்பரசரை சந்தித்த போதே அவர் தனது இந்த விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

பாப்பரசர், போலந்து பிரதமரிடம் மேலும் கூறுகையில், இறைவனின் கிருபை கிடைக்குமேயானால் போலந்திற்கான விஜயத்தை மேற்கொள்ளத் தயாராக விருப்பதாகவும், அதற்கான நம்பிக்கை தம்மிடம் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை நோய்வாய்ப்பட்டுள்ள பாப்பரசரின் நலனுக்கு இறைவனை வேண்டுமாறு வத்திகானில் முக்கிய பதவி வகிக்கும் கர்த்திலான ஜோசப் ரெக்ஸின் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (உ-2)

## பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு அரபு நாடுகளுக்கு அமெரிக்கா உதவவில்லை என்ற குற்றச்சாட்டை அந்நாடு மறுத்துள்ளது

(வாஷிங்டன்)

பயங்கரவாதத்தை ஒழிக்கும் போர் நடவடிக்கைகளுக்கு அரபு நாடுகளுக்கு அமெரிக்கா போதிய உதவி வழங்குவதில்லையென்ற யேமன் நாட்டுப் பிரதமரின் குற்றச்சாட்டை அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் வில்லியம் பேர்ன்ஸ் மறுத்துள்ளார்.

தங்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிக்க ஒவ்வொரு நாடும் கூடியளவு கவனம செலுத்த வேண்டும் என்று பேர்ன்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

யேமன் தொலைக்காட்சிக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியின் போதே யேமன் பிரதமர் அப்துல் காதர் மஹமுதின் குற்றச்சாட்டிற்கு பேர்னஸ் மறுப்புத் தெரித்துள்ளார்.

யேமன் தேசத்தின் இராணுவப் பயிற்சிக்கு அமெரிக்கா வருடாந்தம் 100 மில்லியன் டொலர்களை வழங்குவதாகச் சுட்டிக்காட்டிய பேர்னஸ் யேமனுக்கு உதவுவது குறித்து அமெரிக்கா அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஈராக்கில் பிரெஞ்சுத் தயாரிப்பு நவீன ஏவுகணைகள் பிடிபட்டன

(பக்தாத்)

ஈராக்கில் நிலை கொண்டுள்ள போலந்துப் படையினர் விமானங்களைத் தாக்கும் பிரான்ஸ் தயாரிப்பு ஏவுகணைகளை அங்கு கண்டுபிடித்துள்ளனர்.

இந்த ஏவுகணைகள் இவ்வருடம் தயாரிக்கப்பட்டவையென போலந்துப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி ஹில்லா நகரிலுள்ள ஆயுதசாலையொன்றை சோதனையிட்ட போதே இந்தப் பிரான்ஸ் தயாரிப்பான 4 ஏவுகணைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எனினும் இதனைப் பிரான்ஸ் திட்டவட்டமாக மறுத்துள்ளதுடன் கடந்த இரண்டு தசாப்தங்களில் ஈராக்கிற்கு ஏவுகணை எதனையும் விற்பனை செய்யவில்லையெனத் தெரிவித்துள்ளது.

அத்துடன் தனது புதிய ஏவுகணை ஈராக்கில் இருப்பதற்கான வாய்ப்புகள் இல்லையெனவும் கூறியுள்ளது.

இதேவேளை ஈராக்கில் தற்போது கண்டெடுக்கப்பட்டுள்ள ஏவுகணைகள் சக்தி வாய்ந்தவை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-2)

## எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை கட்டுப்படுத்த உறுதியளிக்க முடியாது

### பாக்.ஜனாதிபதி முஷாரப் தெரிவிப்பு

(இஸ்லாமபாத்)

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக உறுதியளிக்க முடியாது என்று பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இந்திய எல்லையில் 70 ஆயிரம் துருப்புக்கள் குவிக்கப்பட்டுள்ள போதும் அவர்களால் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த முடியாத போது இந்தியக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிலவும் பயங்கரவாதத்தை பாகிஸ்தானால் எப்படிக் கட்டுப்படுத்த முடியும் என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அல்கெய்டா மற்றும் தலிபான் அமைப்புக்களை ஒழிக்க பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்கவில்லையென்ற குற்றச்சாட்டையும் அவர் மறுத்துள்ளார்.

பாகிஸ்தானின் நலன் கருதி அல்கெய்டா மற்றும் பயங்கரவாத அமைப்புக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இதுவரை 500இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரைம்ஸ் நாளிதழுக்கு அளித்த பேட்டியொன்றின் போதே முஷாரப் இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டுப் பகுதியில் இடம் பெறுகின்ற பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பாகிஸ்தான் தான் ஒரு போதும் ஆதரவளிக்கவில்லையென்று அவர் உறுதிபடகூறியுள்ளார். (2)

## அமெரிக்காவிடம் 60 ஹெலிகளை பாகிஸ்தான் வாங்குகிறது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து 60 இராணுவ ஹெலிகொப்ர்களை கொள்வனவு செய்யவுள்ளது.

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அந்த நாட்டிற்கு அமெரிக்க நிர்வாகம் ஹெலிகொப்டர்களை வழங்க விருப்பம் தெரிவித்துள்ளது.

அல்கெய்டா மற்றும் தலிபான் தீவிரவாதிகளை ஒழிக்க உதவும் வகையில் இந்த ஹொலிகொப்டர்கள் வழங்கப்படவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்த ஹெலிகொப்டர்களை அமெரிக்கா எதிர்வரும் டிசெம்பர் மாதம் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே பாகிஸ்தானின் இந்த நடவடிக்கை குறித்து இந்தியா விசேட கவனம் செலுத்து வருகின்றது. (பி-2)

## ஈராக் குறித்த புதிய தீர்மானத்திற்கு ஏனைய நாடுகள் திருத்தம் கூறலாம்

### -கொலின் பவல் அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக் விடயம் தொடர்பாக அமெரிக்கா தயாரித்துள்ள புதிய நகல் தீர்மானம் குறித்து ஏனைய நாடுகள் திருத்தங்கள் கூறமுடியுமென அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ளார்.

ஈராக்கின் நிர்வாகத்தை அந்த நாட்டு மக்களிடம் ஒப்படைப்பதற்கான கால எல்லை எதுவும் அந்த நகல் தீர்மானத்தில் குறிப்பிடப்படவில்லையெனக் கூறி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் மற்றும் பிரான்ஸ் ரஷ்ய ஜனாதிபதிகள் தீவிர கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் மேற்கண்டவாறு கூறியிருப்பது அமெரிக்காவின் தீர்மானம் மீதான பிறநாடுகளின் எதிர்ப்பினைக் குறைப்பதற்கான ஒரு வழி என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேசமயம் ,ஈராக் விடயம் தொடர்பான தமது புதிய நகல் தீர்மானத்திற்கு தீவிர கண்டனம் தெரிவித்துள்ள நாடுகளிற்கு பதிலளிக்கும் முகமாக அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஈராக் மக்கள் தமது நாட்டை நிர்வகிக்க இன்னும் தயாராகவில்லையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-2)

## சமாதான ஒப்பந்தம் பற்றிய அபிப்பிராய வாக்கெடுப்பு

(கார்டூம்)

சூடானில் அரச தரப்பினருக்கும் கிளர்ச்சிவாதிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சமாதான ஒப்பந்தம் தொடர்பாக மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தவுள்ளதாக சூடான் அரசாங்கம் அறிவித்துள்ளது.கடந்த செப்ரெம்பர் மாதத்தில் முக்கிய பாதுகாப்பு ஒப்பந்தமொன்றில் இருதரப்பினரும் கைச்சாத்திட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிதியமைச்சர் அலிமுகமட் உஸமான் இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில், சமாதான ஒப்பந்தம் சம்பந்தமான கருத்துக் கணிப்பு முதலில் நடைபெறுமெனவும் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் பற்றிய வாக்கெடுப்பு பின்னர் இடம்பெறும் எனவும கூறியுள்ளார். (உ-2)

## பயங்கரவாதத்திற்கு பதிலடி கொடுக்க நேட்டோ நாடுகள் இணைந்து இரகசியப் பேச்சுவார்த்தை

(வாஷிங்டன்)

நேட்டோ அமைப்பில்- அங்கம் வகிக்கும் 19 நாடுகளினதும்,7 ஐரோப்பிய நாடுகளினதும் பாதுகாப்பு அமைச்சர்கள் அடுத்த வாரம் இரகசிய பேச்சு வார்த்தையொன்றை நடத்தவுள்ளனர்.

உலகிலுள்ள எந்தவொரு நாட்டின் மீதும் கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்துவது தொடர்பாக விவாதிப்பதற்கே இவர்கள் ஒன்று கூடவுள்ளதாக அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இதுபற்றித் தெரிவிக்கையில்,இது தொடர்பான முதலாவது ஆய்வுக் கருத்தரங்கு அமெரிக்காவின் ஸ்டீபர் விமானப் படைத்தளத்தில் நடைபெறவுள்ளது.

உலகம் பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள நிலையில் அதற்கு எவ்வாறு பதிலடி கொடுப்பது என்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும் எனக் கூறியுள்ளார்.

எனினும் அடுத்த வாரம் நடைபெறவுள்ள இரகசியப் பேச்சுவார்த்தைகள் எங்கு நடைபெறும் என்பது குறித்த தகவல்கள் எதனையும் அவர் வெளியிடவில்லை. (உ-2)

# இந்தியாவிலிருந்து

# பௌத்த மதம் வெளியேறிய விதம்

### இந்தியாவை விட்டு பௌத்தம் வெளியேறிய விதம

பௌத்த மதம் இந்தியாவில் மறைந்து போனமைக்கு,சனாதன தர்மத்தின் வளர்ச்சி தான்காரணம். அதுவே பௌத்த மதத்தைக் கபளீகரம் செய்து விட்டது என்று பொதுவாகக் கருதப்பட்டாலும் அதற்கு வேறு காரணம் உண்டு என்று பார்ஷி நாராயணன் என்பவர் கூறுகிறார். அவர் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் பின்வரும் தகவல் காணப்படுகின்றது.

இப்பொழுது பட்னா என்றழைககப்படும் நகருக்கு அருகில் இருந்த நாலந்தா நகரமும் அங்கிருந்த பௌத்த பல்கலைக்கழகமும் பக்தி யார் என்று எழுதுகிறார் கட்டுரையாளர்.

பௌத்த பல்கலைக்கழகமும் நூல்களும் எரிக்கப்பட்ட சம்பவத்தைப் பற்றி அறியும்போது யாழ்ப்பாணத்து நூலகமும் நூல்களும் இலங்கைப் பௌத்தர்களால் எரிக்கப்பட்ட நிகழ்வு நினைவுக்கு வருகிறது அல்லவா?

★ ★ ★

### சோழியன் குடுமியும் ஜப்பானின் அக்கறையும

இலங்கை விவகாரத்தில் ஜப்பானுக்கு ஏன் இந்த அக்கறை என்பது

இப்படியான செயற்பாடுகளை இந்த மிருகங்களுக்கு பெரும்பாடு பட்டுத்தான் பழக்குகிறார்கள். பழக்குபவர் ஒரு இரும்புக்கழியுடன் எப்பொழுதுமே அவைகளின் முன்நிற்பார். அந்த மிருகங்களைப் பழக்கும்போது இரும்புக்கழியை நீட்டுவார். அதன் முனை நெருப்பில் காய்ச்சப்பட்டிருக்கும். அதனால் இந்தப் பயங்கர மிருகங்கள் அந்தக் கழயைக்கண்டதும் பயந்துகொண்டு சொல்வதைச் செய்கின்றன. தப்பித் தவறி மிரண்டு விட்டால், சில சமயம் அவை கட்டுப்பாட்டை மீறுவதாகத் தெரிந்தால் அதே கதி

எஜமானரின் அருகில் ஓடிப்போய் இரண்டு முன்னங்கால்களையும் உயர்த்திக் கொண்டும் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டும் காயமடைந்தவரின் அருகில் அமர்ந்து கொண்டு விட்டது.

''அப்பாவும் லூலூவும் நெருக்கமாகப் பழகுகிறவர்கள். அவர் எங்கு சென்றாலும் லூலூவும் கூடவே செலலும்'' என்று றிச்சார்ட்டின் 17வயது மகள் கூறினாள்.

லூலூவின் தாய் வீதி விபத்தொன்றில் இறந்து விட்டதால் குட்டியாக விருந்த போதே றிச்சார்ட் வீட்டினர்

செயற்பாடுகள் அதிக மாக நடைபெறுகின்றன.

### வியாழனை ஆய்வு செய்த கலிலியோ

14 ஆண்டுகளாக வியாழன் கிரகத்தை ஆய்வு செய்து வந்த கலிலியோ விண்கலத்தை அதே கிரகத்தின் மீது மணிக்கு ஒரு இலட்சத்து 73 ஆயிரத்து 770 கிலோமீற்றர் வேகத்தில் மோதச் செய்து அதன் ஆயுளை முடித்தனர் விஞ்ஞானிகள். அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான '' நாஸா'' வால் அட்லான்ட்டிஸ் விண்வெளி ஓடத்தின் மூலம் வியாழனை நோக்கி 1989ல் செலுத்தப்பட்டது கலிலியோ செயற்கைக்கோள். ரூபா7,500 கோடி செலவில் அனுப்பப்பட்ட கலிலியோ 14 ஆண்டுகளில் வியாழன் கிரகம் அதனைச்சுற்றி வரும் நிலவுகள் மற்றும் விண்கற்கள் குறித்து 14, 000க்கு மேற்பட்ட படங்களைப் பூமிக்கு அனுப்பி வைத்திருந்தது.

விண்ணில் சுற்றி வரும் ஒரு விண் கல்லுக்கே நிலவு ஒன்று இருப்பதை முதன் முதலாகக் கண்டறிந்து தெரிவித்தது கலிலியோ. வியாழன் கிரகப் பரப்பின் மீது வால் நட்சத்திரமொன்று மோதியதைப் படமெடுத்து அனுப்பியுள்ளது. வியாழனின் 3 நிலவுகளில் உப்பு மிகுந்த சமுத்திரங்கள் இருப்பதையும் கண்டறிந்து தெரிவித்தது.

வியாழனின் வளி மண்டலத்திற்கு மேல் மணிக்கு 1,73,770 கி.மீ வேகத்தில் சுற்றிக்கொண்டு இப்பணியை அது செய்து வந்தது. '' நாஸா'' அனுப்பிய ஆய்வு விண்கலங்களில் வெற்றிகரமாகச் செயற்பட்டவற்றில் கலிலி

# நாய்க்குச் சமனாக கங்காரு மிருகம்

கில்ஜி என்பாரின் துருக்கிய படைகளால் கி.மு.1200 ஆண்டளவில் அழிக்கப்பட்டன. அங்கிருந்த நூல்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அந்த அடையாளம் இன்னமும் அந்த அழிவுற்ற பல்கலைக்கழக சுவர்களில காணக்கூடியதாக இருக்கின்றன வென்று கூறும் அவர் இன்னும் சொல்கிறார்.

பௌத்தச்சங்கத்தைச் சுற்றியே பௌத்த மதம் சுழன்று கொண்டிருந்தது.வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு சங்கத்தின் பெரிய மடாலயங்களும் உயரமான கோபுரங்களும் இராணுவத்தளங்கள் போலவே தென்பட்டுள்ளன.

ஓதாந்தபுரம் அழிக்கப்பட்டதன் பின்னர் நாலந்தாவுக்கு அருகில் இருந்த மடாலயம் தரைமட்டமாக்கப்பட்டு அங்கிருந்த புத்த பிக்குகள் அனைவரின் தலைகளும் துண்டிக்கப்பட்டன. மடாலயத்தில்பொக்கிஷங்களும் ஆயுதங்களும் இருக்கும் என்று எதிர்பார்த்த அவர்கள் ஏராளமான நூல்களையே கண்டனர்.அந்த நூல்களின் பொருள் அறியாத அவர்கள் அனைத்தையும் எரித்து சாம்பல் மேடாக்கினர். ஓதாந்தபுரம் இராணுவக் கோட்டையானது.

திபேத்திய சந்நியாசி தர்மஸ்வாமின் என்பவர் 1235 ஆம் ஆண்டில் நாலந்தாவிற்கு விஜயம் செய்தார். அங்கே இன்னமும் அந்த அழிவுற்ற கட்டடங்களுக்கிடையில் 90 வயதான பௌத்த பிக்கு சிறு அளவிலான சமய வகுப்பொன்றை நடத்திக்கொண்டிருப்பதைக்கண்டார். ராகுல சிறிபத்திரா முதியவராகவும் பலவீனமடைந்தவராகவும் காணப்பட்டார். உள்ளூர் பிராமணர் ஒருவரால் போஷிக்கப்பட்டு வந்தார். சுமார் 300 துருக்கிய படையினர் சுற்று வட்டாரத்தில் காணப்

குறித்து சில வாரங்களுக்கு முன் இந்த பத்திரிகையில் எழுதியிருந்தேன். இலங்கை விவகாரத்தில் தலையிடுவதன் மூலம் தென் ஆசியாவில் தன்னை பிரபலப்படுத்திக் கொள்வதுடன், அமெரிக்காவின் ஆதரவுடன ஐ.நா.பாதுகாப்புச்சபையில் நிரந்தர உறுப்பினர் பதவியை கைப்பற்றிக கொள்ள விரும்புவதாக இருக்கலாம என்று அதில் குறிப்பிட்டிருந்தேன். இந்தக் கருத்தை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் கருத்துவெளியிட்டிருக்கிறார் இந்திய வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒருவர்.

ஜப்பான் இலங்கைப் பிரச்சினையில் அதிக ஈடுபாடு காட்டுவது பற்றி

தான். சுட்டுத் தள்ளப்பட்டு விடும். அதற்கான ஆட்கள் எப்பொழுதுமே ஆயத்தமாக இருப்பார்கள்.

மிருகங்களைப் பிடித்து இப்படிப் பழக்குவதற்காக அவை சித்திர வதை செய்யப்படுகின்றன. காட்டில் சுதந்திரமாகத் திரியும் இந்த மிருகங்களை இப்படிக் கொடுமைப்படுத்தி காட்சிகளாகக் காட்டி பணம் சம்பாதிக்கிறார்கள். இது மிருக வதை அல்லவா?

வீடுகளில் வளர்க்கவும் வேலைகளுக்குப் பழக்கவும் எத்தனையோ மிருகங்கள் இருக்கின்றன. குறிப்பாக நாய்களைக் குறிப்பிடலாம். குரங்குகள்,யானைகள் போன்றவையும்

அதைக் கொண்டு வந்து வளர்த்தார்கள்.

கங்காரு மட்டுமல்ல வேறு சில மிருகங்களும் மனிதருக்குத் தோழனாக இருக்கின்றனவென்று கூறப்படுகின்றது. குறிப்பாக கடலில் வாழும் டொல்்.பின் என்ற மீன் இனம். கடலில் சில சமயம் சிக்கி விடும் மனிதர்களை டொல்்.பின் காப்பாற்றியிருப்பதாகக் கதைகள் உண்டு.

டொல்்.பின் மனிதர்களின் விருப்பப்படி செயல்படுவதற்கு இலகுவாகப் பழக்கப்படக்கூடிய பிராணி என்று கூறுகிறார்கள். டொல்்.பின் மீனைப்

# நாகரிக நாடுகளிலும் இந்த அநாகரிகம்

அவர்கருத்து வெளியிடுகையில், ''ஜப்பான் இதன் மூலம் சர்வதேச பிரபலம் பெற்று ஐ.நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினராக அமர்ந்து கொள்ளப்பார்க்கிறது'' என்று குறிப்பிட்டுள்ளார் அவர்.

சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பதற்கு ஜப்பானின் செயற்பாட்டைக் குறிப்பிடலாமா?

★ ★ ★

### நாயைப்போல் காங்காருவும்

நாயை மனிதரின் நண்பன் என்று கூறுவது பழைய கதை. இப்பொழுது அவுஸ்திரேலியாவில் உள்ள காங்காரு மிருகமும் மனிதரின் நண்பர் எனற அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு

பழக்கப்படுகின்றன. ஆனால் நர்யைப் போல மற்றவை மனிதனுக்கு நண்பனாக இருப்பதில்லை . யானை அறிந்தறிந்தே தன் பாகனையும் கொல்லும் என்பார்கள். நாயே மனிதனுடன் மிகவும் விசுவாசமாக இருக்கும்.

இப்பொழுது கங்காரு பற்றிய செய்தி வந்திருக்கிறது.

அவுஸ்திரேலிய தொலைக்காட்சியில் வரும் ஸ்கிப்பி என்ற காங்காரு பல்வேறு அற்புதங்களைச் செய்யும். அதேபோன்று உண்மையாகவே ஒரு கங்காரு நடந்துகொண்டிருப்பது செய்தியாக வந்துள்ளது.

அதன்பெயர் ''லூலூ'' அதற்கு ஒரு கண தான் தெரியும். லோன் றிச்சார்ட் என்பவர் இதை வளர்த்து வந்தார்.

விக்டோறியா மாகாணத்திலுள்ள தனது காணியில் புயலினால் ஏற்பட்டிருந்த சேதங்கள் பற்றி ஆராய்வதற்

பிரதானமாக வைத்து படங்கள் கூட எடுத்திருக்கிறார்கள்.

★ ★ ★

### மேற்குலகிலும் பால்ய திருமணம்

ருமேனியாவில் (ஐரோப்பிய நாடு) பால்யம் மாறாத ஒரு சிறுவனுக்கும சிறுமிக்கும் பெற்றோர் பகிரங்கமாகத் திருமணம் செய்து வைத்து அசத்தியிருக்கிறார்கள்.

நாகரிகம் குறைந்த நாடுகளில் தான் இந்த விடயம் ஒரு பிரச்சினையாக இருந்து வருகிறதென்றால் மேற்கு நாடுகளிலும் இந்த அநாகரிகம் இருக்கத்தான் செய்கிறது என்ற உண்மை இப்பொழுது வெளியாகியுள்ளது.

தேவாலயத்தில் பகிரங்கமாகத்

யோவும் ஒன்று .குறித்த காலத்திற்கும் மேலாக உழைத்துவிட்ட தால் அதன் ஆயுளை முடித்து விடலாம் எனறு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டாலும் 3 முறை அதற்கு ஆயுள் நீடிப்பு வழங்கப்பட்டது.

எனினும் அதை இப்போது அழித்து விட இறுதியாக விஞ்ஞானிகள் முடிவு செய்தனர். இதற்கிடையே வியாழனின் யுரோப்பா என்னும் நலவின் மீது கலிலியோ மோதிவிடக் கூடிய அபாயம் உள்ளது என்று விஞ்ஞானிகள் கணித்தனர். எனவே கடந்த திங்கட்கிழமை அதன் ஆயுளை முடிக்க '' நாஸா'' விஞ்ஞானிகள் நாள் குறித்தனர்.

அன்று அதிகாலை 1.27க்கு அதை வியாழனின் வளி மண்டலத்திற்குள் மணிக்கு ஒரு இலட்சத்து 73 ஆயிரத்து 770 கிலோமீற்றர்

## அன்றும் இன்றும்

# வியாழனை ஆய்வு செய்த கலிலியோ

படுவதாக செய்தி கிடைத்ததும் சமய வகுப்பு குலைந்து விட்டது. தர்மஸ்வாமின்,வயதான குருவைத் தன் முதுகில் சுமந்துகொண்டு காட்டுக்குள் மறைந்து விட்டார். பின்னர் அவர்கள் இருவர் மட்டுமே திரும்பி வந்தனர். தர்மஸ்வாமினுக்கு இறுதிவகுப்பை நடத்தியதன் பின்னர் தனக்குத் தெரிந்த யாவற்றையும் படிப்பித்து விட்டதாகக் கூறிய குருவானவர்,அந்த திபேத்திய சீடனை தன் நாட்டுக்குத் திரும்பிப்போகும்படி கேட்டுக்கொணடார். போக மனமில்லாமல் புறப்பட்ட சீடர், பௌத்த தர்மத்தின் பல்வேறு சுவடிகளை தனது மஞ்சள் ஆடைக்குள் வெளியில் தெரியாமல் மறைத்துக்கொண்டு நடையைக் கட்டினார். அவருடன் பௌத்த தர்மமும் இந்தியாவைவிட்டு வெளியேறியது

விட்டது. மிருகக்காட்சிச்சாலைகளில் சில காட்டு மிருகங்களைப் பழக்கி சாகசக் காட்சிகளில் பயன்படுத்துகிறாகள்.

ஒரு பக்கம் சிங்கம் மறுபக்கம் வேங்கைப்புலி- இரண்டும் கூண்டிலிருந்து வெளியில் வந்து தங்களுக்குரிய இருக்கைகளில் அமர்கின்றன. நடுவில் ஒரு வெள்ளாடு நடுங்கிக்கொண்டு நிற்கின்றது. மிருகங்களைப் பழக்குபவர் உத்தரவு போடுகிறார். அந்த இரண்டு மாமிச உண்ணிகளும் வெள்ளாட்டின் தலையில் ஒன்றும் பின்பக்கம் ஒன்றுமாகக் காலகளை வைத்துக்கொண்டு நிற்கின்றன. ஆட்டுக்கு உயிர் போய்த்திரும்புகிறது.

அடுத்த உத்தரவு பிறக்கிறது. சிங்கமும் புலியும் தமது கூண்டுகளுக்குத் திரும்புகின்றன.

காக தமது பண்ணைத் தோட்டத்துக்குப் போயிருந்தார்.

அந்தச் சமயம் மரக்கிளை ஒன்று முறிந்து அவர் தலை மீது விழுந்தது. அதனால் மயக்கமுற்ற அவர் தரையில் விழுந்து விட்டார். அவரோடு காணிக்குப் போயிருந்த ''லூலூ'' தன் எஜமானன் மூச்சையாகி விழுந்து வட்டதைக் கண்டதும் என்ன செய்வது என்று அறியாமல் தவித்தது. பின்னர் மிக வேகமாக தத்தித்தத்தி வீட்டுக்கு ஓடி அங்கு வீட்டின் புறத்தில் குரல் எழுப்பியபடி தட்டியது.

சுமார் 15 நிமிடங்கள் அது இவ்வாறு செய்தபோதிலும், வீட்டிலிருந்தவர்கள் முதல் கவலைப்படவில்லை. பின்னர் என்ன நடக்கின்றது என்று பார்ப்பதற்காக வெளி யில் சென்றபோது, நாய் குலைப்பது போல் ஒரு ஒலியை எழுப்பிக் கொண்டு வீட்டாரின் கவனத்தை ஈர்க்க முயன்றிருக்கிறது. வீட்டார் வந்ததும்

திருமணம் நடந்ததால் ஊடகங்களிலும் அது வெளியாகி பலரது கண்டனங்களுக்கும் உள்ளாகியுள்ளது .ஆனால் பகிரங்கமாகாமல் எத்தனை திருமணங்கள் இவ்வாறு நடநதிருக்கின்றன என்பது எவருக்குத் தெரியும்?

மேற்கு நாடு ஒன்றில் பால்ய திருமணம் நடைபெற்றதன் காரணமாக அந்நாடுகளிலும் ஆசிய நாடுகளிலுள்ள இந்தப் பழக்கம் பரவப்போகிறது என்று அங்கு சிலா கூக்குரலிடுவதாகத் தெரிகிறது. ஆனால் ஆசிய நாடுகளில் இந்தப் பழக்கம் இப்பொழுது வெகுவாகக் குறைந்து விட்டது.

மகாத்மா காந்தி,மகாகவி பாரதியார் போன்றவர்கள் இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்குள்ளானவர்கள் தான். ஆனால் அவர்களே இந்த முறையைக் கண்டனம் செய்துள்ளனர்.

நாகரிகம் பேசும் மேற்கு நாடுகளில தான் ஓரினச்சேர்க்கை, ஓரினத்தவர் திருமணம் போன்ற அநாகரிக

வேகத்தில் செலுத்தினர்.

வளிமண்டலத்தில் உள்ள வாயுக்களின் மீது அது மோதியவுடன் அந்த் உராய்வின் வெப்பத்திலேயே பஸ்பமாகி விட்டது. அழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது கூட வியாழனைப்பற்றி அரிய விஞ்ஞானத் தகவல்களை அது பூமியை நோக்கி அனுப்பியது. கலிலியோ அழிக்கப்பட்டதை விஞ்ஞானிகள் இழப்பாகக் கருதவில்லை. '' விண்கலத்தை நாங்கள் இழக்கவில்லை மாறாக விண்வெளி ஆய்வில் புதிய அடியெடுத்து வைத்துள்ளோம்'' என்றார் அப்பணியின் திட்ட இயக்குநர் டாரென்ஸ் ஜான்சன். 14 ஆண்டுகளாக உழைத்து 14,000க்கு மேற்பட்ட படங்களை அனுப்பிய கலிலியோ திங்கட்கிழமையுடன் வரலாறாகிவிட்டது. □

**அன்பன்**

# நாடிவரும் மாணவர்களின் ஆளுமைப் பண்புகளை தேடிப்பிடித்து வழிகாட்டுவது ஆசிரியர் கடமை

②

செவ்வி கண்டவர்: வித்தகன்



ஆசிரியமணி எம்.எஸ். ஸ்ரீதயாளன்

● **பாடசாலைக் கற்றல், கற்பித்தல், கணிப்பீடு மற்றும் ‘‘ஒப்படை’’ என்பனவற்றின் தன்மைபற்றி பொதுவாக பெற்றோரும் மற்றோரும் இன்னும் அறியாதிருப்பவர்கள் பற்றியும் யாது நினைக்கிறீர்கள்?**

மீண்டும் சொல்கிறேன் தற்போதைய கல்விமுறை மாணவனின் அலகுத்தேர்ச்சிகளை அவ்வப்போதே பரீட்சித்து உடனடியாகவே பரிகாரம் செய்யக் கூடியதொன்று எழுதிக்காட்ட இயலாத மாணவனுக்கு மன எழுச்சியாலும், உடலியக்கத் திறனாலும் தான் கற்றதை, தன் திறமையை வெளிக்காட்டி புள்ளி பெறக்கூடிய வகையில் சந்தர்ப்பமளிக்கிறது. மாணவரின் இயலுமை, இயலாமையை ஆசிரியர் அறிந்து கற்பிக்கவேண்டும். எதைக்கற்றான் என்பதைவிட எப்படிக் கற்றான் என்பதற்கே முக்கியமளிக்கவேண்டும். மேலாக மாணவன்தான் கற்ற அலகில் எவ்வளவு தூரம் தேர்ச்சி பெற்றான் என்பதைக் கணிக்க, பலவிதமான கணிப்பீட்டு நுட்பங்களை, கணிப்பீட்டுக்கருவிகளை ஆசிரியர்கள் பிரயோகிக்க வாய்ப்புத் தரும் கல்வி முறை இது . இக்கணிப்பீட்டுக் கருவிகளில் ஒன்று தான் ‘‘ஒப்படை’’ வழங்குதல்.

● **ஒப்படைகள் என்றால் என்ன .அதன் பயன்பாடு யாது என்பது பற்றி சுருக்கமாகக் கூறுங்களேன்?**

நல்லவினா கருத்துடன் கண்டறிமுறைக் கற்றல் என்பது பா.ம. கவின் முக்கிய அம்சம். மாணவனொருவன் Mastery Learning எனப்படும் பாண்டித்திய கற்றல் மட்டத்தை அடையும் பட்சத்தில் தான், சரியான கற்றல் இடம்பெறுகிறது. இங்கே மாணவன் தானாகவே முயன்று செயற்படுதல் என்பது முக்கியமானதாகும். இந்த நோக்கிலேதான் ஒப்படை (Assignment) எனப்படும் கணிப்பீட்டுக் கருவியானது மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. உலக நாடுகளிளெல்லாம் பல ஆண்டுகளாக கல்வ முறையில் பிரபலம் பெற்ற கணிப்பீட்டுக் கருவி என்றால் மிகையானது.

ஒப்படை என்பது கற்றல், கற்பித்தல், மதிப்பிடல் என்ற மூன்று செயற்பாடுகளுக்கும் உதவும் ஒரு அம்சமாகும். கணிப்பீடுசெய்யும் செயற்பாட்டின் பக்கம் வகுப்பறையை ஈடுபடுத்துவதும் குறிக்கோளுடனான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றின் போது பயன்படுத்தக் கூடிய செயற்றிறன் மிக்கதும், பயன்பாடுள்ளதுமான ஒப்படை உண்மையில் ஒருவகைக் கற்பித்தல் உபகரணமேயாகும்.

அதேநேரத்தில் கற்றல் உபகரணமாகவும் மதிப்பீட்டுக் கருவியாகவும் உதவுவது இந்த ஒப்படை. ஒப்படை தயாரிப்பதற்கு சில நிபந்தனைகள் உண்டு. மாணவர்கள் தேடல் பிரயோகம் என்பன இங்கு அதிகம். மாணவர்கள் ஒவ்வொருவரும் தாமாகவே தேடி, முயன்று ஆலோசனையின் அடிப்படையில் ஒப்டைகளைத் தயாரித்து நிறைவேற்றுதல் என்பது கல்வி நடவடிக்கையில் மிகப்பிரயோசனமானதொன்றாகும்.

● **சரி இவ்வளவு கருத்துக்களையும்,பயனுள்ள தகவல்களையும் தந்தீர்கள் நன்றி, இனி ஆசிரியர்கள் சார்பாக நீங்கள் இன்று தரக்கூடிய செய்தியாது?**

நான் ஏலவே கூறியது போல எழுத்தறிவிக்கும் ஆசிரியன் உண்மையில் இறைவனுக்கு சமனாய் அன்றும் இன்றும் என்றுமே மதிக்கப்படவேண்டியவன். ஆசிரியர் பற்றி இலக்கணம் கூறிய நன்னூலார்,

‘‘குலனருள் தெய்வம் கொள்கை மேண்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வாண்மை
நிலம் மலை நிறைகோல், மலர் நிகர் மாட்சியும்
உலகியல்அறிவோடு உயர்குணன் இணையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே’’

என்பார் ஆசிரியர் வாண்மைக்கு முக்காலமும் பொருந்தும் ஒன்று. ஆனால் இன்று ஆசிரியம் புனிதமான தொழில் என்பதற்கு மேலாக; நல்ல ஒரு தொண்டு என்பதை நினைக்கின்ற மனப்பாங்கு மாற்றம் இன்னும் எம்மாசிரியர் மத்தியில் திருப்தியாக ஏற்படவில்லை. எதையும்நேராக ஏற்றுக்கொள்வதைவிட மறையாகச் சிந்திக்கின்ற , வாதிக்கின்ற பண்பு அவ்வளவு ஆரோக்கியமானதல்ல. மனித சமூகங்களின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் மட்டுமல்ல வளமான வாழ்வுக்கும் ஆதாரமாயமைவது கல்வி, அந்தக் கல்வியை இளைய தலைமுறையினருக்கு ஊட்டுகின்ற உன்னத பணியை ஆசிரிய சமூகமே மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் ஆசிரிய சமூகம் பாராட்டிப் போற்றக்கூடியதே. பாடசாலைக் கல்வி முறைமையின் போக்குப் பற்றி சாதாரணமாக மக்கள், பெற்றோர்கள் மாத்திரமன்றி சான்றோர்களும் ஏன் ஆசிரியர்கள் கூட தெளிவான உணர்வில்லாதிருக்கிறார்கள்.பிள்ளைகளை இயந்திரங்களாக நினைத்து கற்றல், கற்பித்தல் முறைமையின் உளவியல் அடிப்படைகளை அறியாது கல்வியைத் திணிக்கும் ஒரு போக்கு இன்னமும் மாறவில்லை. குறிப்பாக ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சைகளுக்கு தோற்றும் பிள்ளைகள்மட்டில் பெற்றோர்களினதும்,சமூகத்தினதும குறிப்பாக ‘‘தனியார் கல்வி நிறுவனங்களினதும்’’ கவனத்தை ஈர்க்கவிரும்புகிறேன்.

● **இப்போது புதிய பாடசாலைக் கல்வி முறைமைகளை தனியார் கல்வி நிறுவனங்களின் கற்பித்தல் கருமங்கள் எந்தவகையில் அனுசரிக்கின்றன என்பது பற்றிக் கூற முடியுமா?**

இக்கட்டத்தில்தான் வகுப்பறை மட்டக் கணிப்பீட்டின் (Class Room Based Assesment) சிறப்பை நாம் நோக்கமுடியும். கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று இயைவுபட்டிராத தன்மையினால், நம்பாடசாலைக் கற்றல் ,கற்பித்தல் நடவடிக்கைகளில் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டது. பிள்ளைகளின் தகுதி, ஆற்றல், கவர்ச்சி, ஊக்கம், அனுபவம், ஆயத்தநிலை என்பவற்றின் அடிப்படையில் அவர்களின் கற்றல் அபிலாஷைகளை இனங்காணாத தன்மையும், புத்தகமையக் கல்வியும், Walk-Talk-Chalk முறைமையான ஆசிரியர் மையப்போதனை, விரிவுரை முறைகளுமே ஆசிரியர்கள் பால் மாணவருக்கு பற்று, விருப்பு இல்லாமல் செய்திருக்கிறது.

பொதுவாக பாடசாலைக் கல்வியில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

Tuitory- தனியார் கல்வி நிறுவனங்களின் தோற்றமும், அங்கு கற்பிக்கும் வர்க்கத்தினரின் ஏதோ ஒருவகையிலான கற்பித்தல் கவர்ச்சியும் மாணவர்களை ஆட்கொள்ளத் தொடங்க, மாணவர் படை தனியார் கல்வி நிறுவனங்களை நோக்கி நகர வாய்ப்பளித்தது. அடித்தளமாய் என்றும் விளங்கும் பாடசாலைகளின் முறைமைக் கல்வியோடு சில நுட்பங்களால் கற்பித்தலில் கவர்ச்சியைக் காட்டிய தனியார் பாடசாலைகள், சமூகத்தில் பெயர் எடுத்துப் பெரிய இடத்தைக் கைப்பற்றலாயின. அறிவு ஆட்சிக்கு மாத்திரம் பாடசாலைகளில் முக்கியம் கொடுத்து எல்லா மாணவர்களுக்கும் அவரவர் இயலுமையையும் இயலாமையையும் இனங்கண்டு கவர்ச்சிகரமாகக் கற்றலை நடத்தாத பாடசாலைக்கல்வி முறைமையிலும் நம் ஆசிரியர்களிலும் மாணவர்கள் தங்கியிருப்பதாக நினைக்கவில்லை.

‘‘Students are not totally dependable on school teachers or in other word they are not expecting or respecting them for anything

இந்நிலையை மாற்ற, பாடசாலைக் கல்வியின் மேன்மையை உலகம் உணர ஆசிரியர்கள மாணவருக்கு நல்ல கல்வியை பொருத்தமான வேளைகளில் பொருத்தமான நுட்பங்களைப் புகுத்திக் கற்பிக்க, கற்க வழிகாட்ட தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.சமூகத்தின் கல்வியுலகத்தின் சவால்களுக்கு தக்க பதிலடி கொடுக்கவேண்டும்.

இக்கால கட்டங்களில் தான் மாணவர்கள் மட்டில் மாத்திரமல்ல பெற்றோர் மத்தியிலும், சமூகத்தின் பார்வையிலும் ஆசிரிய உலகம் சற்று புறம்தள்ளப்பட்டிருந்தது.

இப்போதைய முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைக்கல்வியில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டத்தைப் பொறுத்த அளவில் மாணவர்கள் இனி.பெருமளவு தம் ஆசிரியர்களிலேயே தங்கியிருக்க வேண்டிய தேவையும் வந்திருக்கிறது என்பதைச் சகலதரப்பினரும் உணர்ந்தாகவேண்டும். பெரிய பொதுப்பரீட்சைகளெனக் கருதப்படும், க.பொ.த.சாதாரண, உயர்தர வகுப்புகளில் கற்கும் மாணவர்கள் கணிப்பீட்டுக் கருவிகளால் மதிப்பிடப்படும் தேவையிருக்கிறது. பாடசாலை ஆசிரியர்களுக்கே இந்த அருகதையும், சந்தர்ப்பங்களும் உண்டு. அவ்வப்பாடங்களைக்கற்கும் ஆசிரியர்களிடமே இத்தகுதிகள் ஒப்படைக்கப்பட்டிருப்பது இங்கே நோக்கத்தக்கது.

தாம் கற்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாணவர்கள் கொடுக்கும் மதிப்பும், கௌரவமும் ஸ்திரம் பெறும் வாய்ப்புகளை நவீன கல்வி முறைமை வழங்கியிருக்கிறது. மாணவனின் பாடசாலை வரவும், ஆசிரியரோடு மாணவன் கொள்ளுகின்ற அன்னியோன்னியமும், தொடர்பாடற்றன்மையும் கூட இதனால் வலுப்பெற்று பாடசாலை ஆசிரியருக்கு முன்பில்லாத பெருமையைச் சேர்ப்பிக்கிறது. அவதானிப்புப் பத்திரம், செவ்வை பார்த்தல் பட்டியல் Profile எனப்படும் செயலடைவுக்கோவை என்பன இதன்பாற்படுவன. இவையெல்லாவற்றுக்கும் ஆசிரியர்களாகிய நாங்கள் கல்வித் திட்டம் (பா.ம.க) எதிர்பார்க்கின்ற வகையிலே நேர்மனப்பாங்கோடு பாடசாலைகளிலே எம்கடமையை ஆற்றுகிறோமா என்ற ஒரு கேள்விக்கும் பதில் தரத் தயாராவோமானால்-நாம் நிச்சயம் நல்லாசான்கள் என்ற பெயருக்கு லாயக்களனவர்களாவோம். மாணவ சமூகம் எங்கள் (Resource) கல்வி வளத்தை தன்னலங்கருதாத நேர்மையான, உறுதிப்பாட்டை காட்டுகின்ற பயன்பாட்டையும் வெற்றியையும் ஈட்டித் தருகின்ற வழிகாட்டல்களால் மகிழ்ந்து,·உயிர்ந்து எம்மை உயர்த்தும் மதிக்கும் கல்வி என்பது அறிவை விளங்கிக் கொள்ளும் செயல் மட்டுமல்ல நிதமும் மாறிக்கொண்டிருக்கும் வாழ்க்கையின் சவால்களை வெற்றிகரமாக எதிர்நோக்கக் கூடிய இயைபாக்கத்தையும் சமநிலை ஆளுமையையும் கொண்ட நபரை உருவாக்குதலும் ஆகும். இது ஸ்ரீமதி இந்திரா காந்தி கொண்டிருந்த கருத்தும் கூட கல்வியின் சீரிய இலட்சியமானது தனிமனித வளர்ச்சி, சமுதாய எழுச்சி,பொருளாதார உயர்ச்சி, ஆன்மீக, பண்பாட்டு மலர்ச்சி, மேலாக இன உணர்ச்சி, தேசபக்தி என்பவற்றையும் வளர்க்க வேண்டும். மக்கள் சேவைக்கு உதவ வேண்டும். ஆசிரியம் பற்றி பாரதி அன்றே பாடினான்,பசியால்வாடும் ஏழைகளுக்கு உணவைத்தேடும் வழியைக் கற்றுக்கொடுப்பதே மோலனது என்பதை ‘‘..யாவினும் புண்ணியம் கோடி,ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்’’என்பது அவன்பாடல். நிறைவாக, ஆசிரியர்களாகிய நாம் முதலில் கல்வியின் பொதுவான நோக்கம், சிறப்புநோக்கம் என்பவற்றை உணர்ந் தவர்களாக எமது எதிர்காலச் சந்ததியை நல்ல வகையிலே வழிநடத்தும் நோக்கோடு எமது தனிப்பட்ட வாழ்வுக்கு மட்டு மல்ல, இனத்தினதும் சமூகத்தினதும் தேசத்தினதும் வெற்றிக்கும் சுபீட்சத்துக்கும் பயன்படத்தக்கதாக எம்பணியை ஆற்றவும் முனைய வேண்டும்.ஆசிரியத்தை மனநிறைவோடு, மகிழ்ச்சியோடு மதித்து ஒரு சவாலாக இனிமுன்னெடுக்க வேண்டும்.‘‘ஒரு நாட்டின் ஆசிரியர் எத்தரத்தினரோ அத்தரத் தினதே அந்நாடு’’ என்று கூறுவார் அறிஞர் கலாநிதி இ.ஏ.பயர்ஸ். ‘‘மனிதனை ஆக்குபவன் ஆசிரியன்’’ என்றார் ஜோன்ஸ் அடம்ஸ். ஆசிரியர்களை பொதுவாக மூன்று பிரிவுகளுக்குள் பிரித்துக் காண ஒரு சட்டகம் தருகிறேன்.

(செவ்வியின் தொடர்ச்சி நாளை)

---

## 3 ஆயிரம் குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியேறியுள்ளவர்களில் மேலும் 3ஆயிரம் குடும்பங்களுக்கு, இம் மாதம் மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

ஒன்றிணைந்த உதவித்திட்டத்தின் கீழ் மேலும் 3 ஆயிரம் குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வீதம் வங்கிகளூடாக வழங்கப்படவுள்ளதாக யாழ்.அரச செயலகத்தில் இயங்கும் நிக்கொட் அமைப்பின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மீளக் குடியேறியுள்ள 16 ஆயிரத்து 503 குடும்பங்கள் கொடுப்பனவு பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும் ,கடந்த செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் 8 ஆயிரத்து 999 குடும்பங்களுக்கே 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

கொடுப்பனவு வழங்கப்பட வேண்டிய எஞ்சிய 7ஆயிரத்து 504 குடும்பங்களுள் ,3 ஆயிரம் குடும்பங்களுக்கே இம் மாதம் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுளளமை குறிப்பிடத்தக்கது. (தி-16)

## கோப்பாய்க் கோட்ட

# சிறுவர், முதியோர் தினத்தையொட்டிய ஆக்கத்திறன் போட்டி முடிவுகள்

(தனங்கிளப்பு)

சிறுவர்-முதியோர் தினத்தை முன்னிட்டு கோப்பாய்க் கல்விக் கோட்ட பாடசாலைகளிடையே நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு:

**சிறுவர் தினப்போட்டி முடிவுகள்**

**பாலர் ஓவியம்**

1ம் இடம்:த.துவாரகா-யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.
2ம் இடம்:ச.விதுஷா-யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தி.
3ம் இடம்:யூ.திலக்ஸி-யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.

**கட்டுரை**

**பிரிவு I**

1ம் இடம்:ந.நிரோசிகா-யா/அத்தியார் இந்துக்கல்லூரி.
2ம் இடம்:கு.நிஷாந்தி-யா/அத்தியார இந்துக்கல்லூரி.
3ம் இடம்:யோ.ஸ்ரீபிரணவன்-யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தி.

**பிரிவு II**

1ம் இடம்:இ.கோகில்நாத்-யா/சோமஸ்கந்தாக்கல்லூரி.
2ம் இடம்:அ.கோபிகா-யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தி.
3ம் இடம்:கு.அர்ச்சனா-யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தி.

**பிரிவு III**

1ம் இடம்:சு.கேதாரணி-யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
2ம் இடம்:த.சோபிதா-யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.
3ம் இடம்:மா.சத்தியபிரபா-யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

**கவிதை**

**பிரிவு I**

1ம் இடம்:ச.தனுஷன்-யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
2ம் இடம்:ச.லோஜினா-யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி.
3ம் இடம்:ச.தேவகுமாரி-யா/கோப்பாய் சரவணபவானந்தா வித்தி.

**பிரிவு II**

1ம் இடம்:ம.வானதி-யா/சோமஸ்கந்தாக்கல்லூரி.
2ம் இடம்:ஜெ.இலக்கியா-யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தி.
3ம் இடம்:ற.றஞ்சிதா-யா/நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை

**பிரிவு III**

1ம் இடம்:சி.கோபிகா-யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
2ம் இடம்:சி.விசயகௌரி-யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.
3ம் இடம்:சி.கோமளாதேவி-யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

**முதியோர்தினப் போட்டி முடிவுகள**

**கட்டுரை**

**பிரிவு I**

1ம் இடம்:சி.நிரோஷிகா-யா/அத்தியார் இந்துக்கல்லூரி
2ம் இடம்:இ.தர்மினி-யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி.
3ம் இடம்:பா.மதுரா-யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தி.

**பிரிவு II**

1ம் இடம்:இ.கிருத்திகா-யா/இடைக்காடு மகாவித்தி.
2ம் இடம்:பா.துளர்சிகா-யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி.
3ம் இடம்:அ.அபிராமி-யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தி.

**பிரிவு III**

1ம் இடம்:கோ.சபேசன்-யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.
2ம் இடம்:யோ.தமிழ்ச்செல்வி-யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.
3ம் இடம்:செ.யசோதா-யா/அத்தியார் இந்துக்கல்லூரி.

**கவிதை**

**பிரிவு I**

1ம் இடம்:ச.தேவகுமாரி-யா/கோப்பாய் சரவணபவானந்தா வித்தி.
2ம் இடம்:மா.மயூரதி-யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.
3ம் இடம்:இ.கிருஸ்ணபவானி-யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.

**பிரிவு II**

1ம் இடம்:கு.நிஷாலினி-யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தி.
2ம் இடம்:ம.வானதி-யா/சோமஸ்கந்தாக் கல்லூரி
3ம் இடம்:சு.துவாரகா-யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.

**பிரிவு III**

1ம் இடம்:வி.விக்னேஸ்வரி-யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி.
2ம் இடம்:செ.காந்திமதி-யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
3ம் இடம்:சி.கோமளாதேவி-யா/கோபபாய் கிறிஸ்தவக் கல்லூரி.

(உ-37)

# எதிர்கால ஏற்றத்தின் ஏணிப் படிகளாவர் ஆசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பகுதிகளில் வாழ்கின்ற அனைத்துத் தமிழரும் இன்றைய நாளில் எமது ஆசிரியர்களைப் பாராட்டக் கடமைப்பட்டவர்கள். அந்தந்த வலயங்களில் இது தொடர்பாக நிகழும் நிகழ்வுகளில் அனைவரும் பங்குகொள்ள வேண்டும். ஒத்துழைக்க வேண்டும். இன்றைய நாளில் ஒவ்வொரு தமிழ் மக்களின் நெஞ்சங்களிலும் எமது எதிர்கால ஏற்றத்தின் ஏணிப் படிகளான இவ் ஆசிரியர்களின் பணி போற்றப்பட வேண்டும். பாராட்டப்பட வேண்டும். ஆசிரிய உலகத்திற்கு அதுவே நாம் செய்யும் நன்றிக்கடனாகும்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை, ஆசிரியர் தினத்தையொட்டி விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. பேரவை மேலும் அவ்வறிக்கையில் கூறியிருப்பதாவது.

உலகத்தில் மக்களுக்குத் தொண்டு செய்பவர்களை நன்றியுடன் நினைவுகூர்வதும் பாராட்டுவதும் மனிதநேயப் பண்புகளுள் ஒன்று என்பது மட்டுமன்றி எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகும். இந்த வகையில் ஆசிரியர் நாளையொட்டி எமது தேசத்தின் ஆசிரியர்களை வாழ்த்துவதிலும் பாராட்டுவதிலும் கல்வி மேம்பாட்டுப் பேரவை பேருவகை அடைகின்றது. எமது ஆசிரியர்கள் கடந்த காலங்களில் குறிப்பாக எமது பகுதிகளில் போர் நடந்த காலங்களில் ஆற்றிய பணி போற்றத்தக்கது. ஆசிரியர் பற்றாக்குறை வளப்பற்றாக்குறை, பொருண்மியத் தடை போன்ற பல சிக்கல்களை எதிர்கொண்டபோதும் தமது பணியை உயர்வாகக் கருதி அச்சத்தையும், துன்பங்களையும், நெருக்குதல்களையும் எதிர்கொண்டு ஆற்றிய பணியை கல்வி மேம்பாட்டுப் பேரவை உளமாரப் பாராட்டு கினறது. குறிப்பாக எந்தவகையான கொடுப்பனவுகளைப் பெறாதும் தமது கடமையைச் செவவனே புரிந்து வருகின்ற தொண்டர் ஆசிரியர்களின் பணியை மறக்கக்கூடாது. அதேபோல் சிறிதளவு கொடுப்பனவுடன் கடமைபுரியும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் பணியினையும் மனம் திறந்து பாராட்டுகின்றோம். நடந்துகொண்டிருக்கும் அவர்களது போராட்டம் வெற்றிபெறுவதுடன், அவர்களுக்கு நிலையான பணியமர்த்தம் கிடைக்க வேண்டுமென்பதும் பேரவையின் வேணவாவாகும்.

ஒவ்வொரு பிள்ளையும்கற்கவேணடும். அந்தப் பிள்ளையை நாட்டுக்கேற்ற நற்குடிகளாக உருவாக்க வேண்டும் என்ற நினைப்புடனும் பொறுப்புடனும் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள், பள்ளி முதல்வர்கள், கல்விசார் அலுவலர்கள் அனைவரையும் உலக ஆசிரியர் நாள் கொண்டாடப்படும் இவ் வேளையில் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையானது வாழ்த்திப் பாராட்டி நிற்பதில் பெருமிதம் அடைகின்றது.

(பி)

# முஸ்லிம் மக்களைப் புறக்கணித்து நாட்டில் அமைதியை ஏற்படுத்த முடியாது

## பிரதி அமைச்சர் வஷீர் சேகுதாவுத் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய இனங்களில் ஒன்றான முஸ்லிம் மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. எனவே முஸ்லிம் மக்களின் உணர்வுகளையும் நியாயமான கோரிக்கைகளையும் புறக்கணித்துவிட்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் பிரதி அமைச்சருமான வஷீர் சேகுதாவுத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஏறாவூரில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்று அமையும் பட்சத்தில் முஸ்லிம்களின் சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இந்த நாட்டின் தேசிய இனங்களில் ஒன்றான முஸ்லிம் சமூகம் தொடர்பாக அரசாங்கம் மற்றும் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு எனன என்பது பற்றி தெரிந்து கொளளும் காலம் தற்போது ஏற்பட்டுள்ளது.

அடுத்தகட்ட சமாதானப் பேச்சில் முஸ்லிம்கள் தனித் தரப்பாகக் கலந்து கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(த)

# உலக ஆசிரியர் தின பாக்கள்

### ஊருக்குழைப்பவரே வாழ்க!

சமூகத்தின் சிற்பிகளாய் சந்தன மரங்களாய்
சத்தான கருத்தைத் தரும் முத்துக்களே
சமுக விழிப்புடனே சரிநிகராய் விளங்கி
சமாதான தீபமாய்த் திகழ் பவரே

இதிகாச புராண விழுமியங் களையே
இலக்கண மாகக் கொண்டவரே
இலக்கியத்தில் வரும் இலக்கணங் களையே
இங்கிதமாய் நாளும் உரைப் பவரே

நாளும் புரிந்திடும் நற்பணி யாலே
நானிலந் தன்னில் நனி சிறப்பதற்கு
உனையும் நல் லுறக்கத்தையும் விடுத்து
ஊருக் குழைப்பவரே வாழ்க!

*குகதாசசர்மா சிவகுமார், சுன்னாகம்.*

### ஏணிப்படியாக

நன்றிப் பெருக் குடனே
நல்லா சிரியர் தமை
குன்றின் மேல் விளக்காக
குவலயத் திலே துதிப்போம்!

நன்நீர்க் கிண றாகும்
நல்லா சிரிய ரிடம்
கன்ன லெனவே கல்வி
கற்றுத் தெளிந் திடுவோம்!

பொல்லா வினைக ளெலாம்
பொசுக்கி யழித்து விடும்
நல்லா சிரிய ரென்றும்
நம்மிடையே வாழ்ந் திடுவர்!

ஏணிப் படி யாகி
எம்மை யுயர்த்தி விடும்
பாணி தமை நாளும்
பற்றிப் பிடித் திடுவோம்!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம

# அரச சேவை கட்டமைப்பை மாற்றியமைக்கத் திட்டம்

(கொழும்பு)

உலக வங்கியின் சிபார்சின் பேரில் அரச சேவையின் கட்டமைப்பை மாற்றியமைப்பதற்கான திட்டங்களை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. இதனை பொது நிர்வாக சேவைகள் அமைச்சர் வஜிர அபேயவர்த்தன செய்தியாளர் மகாநாட்டில் வைத்து தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஆண்டு முதல் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்ற இப் புனரமைப்புத் திட்டத்திற்கென 300 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு உலக வங்கி உறுதியளித்துள்ளது.

இன்றைய அரசாங்கம் இதற்கு முதன்மையான கவனத்தினை செலுத்துகிறது. வரலாற்றில் முதன் முறையாக உலகவங்கி இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

டாக்டர்கள், ஆசிரியர்கள் போன்று அரச பணியாளர்களும் வேறு பகுதி நேர தொழில்களிலும் ஈடுபடுவதை அனுமதிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படும்.

அத்துடன், இந்த மீள்கட்டமைப்பை உருவாக்கும் திட்டம் பற்றிய விழிப்பு நிலையை ஏற்படுத்தவுள்ளது. இதனால ஒரு மில்லியன் வரையான அரச ஊழியர்கள் நன்மை அடைவர் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(உ-06)

# இனங்கள் இரண்டும் இணைந்தால் எதனையும் சாதிக்க முடியும்

## அமெரிக்கத் தூதுவர் நம்பிக்கை

(கொழும்பு)

தமிழ் மற்றும் சிங்கள மக்கள் இணைந்து செயற்படுவதை நோக்கும்போது, இலங்கையில இதனை விட பெரிய விடயங்களைச் சாதிக்க முடியும் என்பதை காணக்கூடியதாக உள்ளது என அமெரிக்கத் தூதுவர் ஜெவ்றிலஸ்ரன் தெரிவித்தார்.

தெனியாப் பிரதேசத்தில் 100 வீட்டுத்திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், இவ் வீடுகளை நிர்ணயிக்க இரு இனத்தவர்களும் முன்னின்று செயறபட்டதை போன்று, ஏனைய விடயங்களிலும் ஒற்றுமையுடன் செயற்படுவார்கள் என்பதற்கு இதுவொரு முன்னுதாரணம் என்றார்.

கடந்த மேமாதம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகளை கையளிக்கும வைபவத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(தி-61)

# செய்தித் துளிகள்

## அங்கத்துவ அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச்சங்கம், வாடகைக்கு அமர்த்தப்படும் முச்சக்கர மோட்டார் ஊர்திகளின் சேவை ஒழுங்குகள் தொடர்பாக அதன் சாரதிகளுக்கு புதிய அங்கத்துவ அட்டைகளை வழங்கவுள்ளது.

இவ் அங்கத்துவ அட்டைகளை வழங்கும் நிகழ்வானது இன்று மு.ப.10.00மணிக்கு பருத்தித்துறை வீதி முதலாம் ஒழுங்கையில் அமைந்துள்ள தனியார் போக்குவரத்துச் சங்க இணையக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(தி-18)

## கிராம அபி.சங்க கட்டடத் திறப்பு விழா

(கந்தர்மடம்)

புங்குடுதீவு பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும் தொண்டர் கந்தையா திருநாவுக்கரசின் 2ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வும் எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் ப.தயானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில், தீவகம் தெற்கு பதில் பிரதேச செயலர் ப.லோகநாதன், தீவகம் தெற்கு திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் த.தெட்சணாமூர்த்தி, யாழ்.மாவட்ட சிரான் இணைப்பாளர் செ.இரத்தினம் மற்றும் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி செயலக உத்தியோகத்தர் சி.செல்வரத்தினம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன், தீவகம் தெற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.சுந்தரலிங்கம், புங்குடுதீவு மேற்கு கிராம அலுவலர் சு.ப.விநாயகமூர்த்தி, புங்குடுதீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் யாழ்இனியன் ஆகியோரும் மற்றும் பல பிரமுகர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

(உ-112)

## விபத்தில் இருவர் பலி

(கொழும்பு)

போவத்தப்பு பிரதேசத்தில் கடந்த வெள்ளியன்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேற்படி பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கருங்கல் ஏற்றிய லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதால், அதில் பயணம் செய்த இருவரும் ஸ்தலத்திலேயே பலியாகினர்.

இவ்விபத்துத் தொடர்பாக வென்னப்புவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(தி-61)

## விசர்நாய் கடித்து சிறுவன் மரணம்

(மருதங்கேணி)

விசர்நாய் கடிக்கிலக்கான சிறுவன் ஒருவன் அண்மையில் மல்லாவி வைத்தியசாலையில் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

துணுக்காய் பிரதேச தேறாங்கண்டலைச் சேர்ந்த ஜெகநாதன் கனகராசா (வயது 15)என்ற சிறுவனே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

(தி-35)

## வளர்பிறை வெளியீடு

(கோப்பாய்)

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி முதலாம் வருட ஆரம்ப பிரிவு மாணவர்களின் அனுசரணையுடன் வளர்பிறை கையெழுத்துச் சஞ்சிகை உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை மண்டபத்தில் அண்மையில் வெளியிடப்பட்டது.

ஆசிரிய மாணவன் த.சசிதரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன் பாடசாலை அதிபர் மு.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(தி-79)

## கைதடியில் முதியோர்தின விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி அரச முதியோர் இல்லத்தின் 50வது ஆண்டு நிறைவு விழாவும், சர்வதேச முதியோர்தின நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.2.30மணிக்கு கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

வட-கிழக்கு மாகாண சமூக நலத்துறைப் பணிப்பாளர் என்.ஆர் றஞ்சினி தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில, வட-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.இரங்கராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்.அரச அதிபர் செ.பதமநாதன் மற்றும் புனர்வாழ்வு சமூக நலத்துறை மேலதிக செயலாளர் கே.மகாலிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளார்.

(உ-18)

## சிறுவர் முதியோர் தினவிழா

(தனங்கிளப்பு)

தென்மராட்சி பிரதேச செயலகம் நடத்தும் சிறுவர், முதியோர் தினவிழா இன்று திங்கட்கிழமை பி.ப.1.00மணிக்கு தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் சாவகச்சேரி தென்னிந்தியத் திருச்சபை பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்விவலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கே.பிறேமகாந்தனும், கௌரவ விருந்தினர்களாக அருட்திரு. ரி.எச்.வசந்தகுமாா சாவகச்சேரி நகர கைத்தொழிற்துறைத தலைவர் பி.என்.சற்குணராசா ஆகியோரும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு.செ. சரவணபவனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(பி-31)

## திரைப்படப் பயிற்சிப் பட்டறை

(வடலியடைப்பு)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகுடன் பிரித்தானியாவின் ஸ்கிரிட் நெற் நிறுவனம் ஒன்றிணைந்து திரைப்படத்துறை தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்றை நடாத்தவுள்ளது.

திரைப்படத் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் மற்றும் நடிகர்களுக்கு நடாத்தப்படவுள்ள மேற்படிப் பயிற்சிப்பட்டறை இன்றிலிருந்து எதிர்வரும 17ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

(தி-21)

## கத்திக்குத்துக்கு உள்ளானவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

கத்திக்குத்துக்கு இலக்கான நபா யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இருபாலை கிழக்கைச் சேர்ந்த ஏ.நடராசா (வயது 55)என்பவரே இவ்வாறு கத்திக்குத்துக்கு இலக்காகி சிகிச்சைபெற்று வருகின்றார்.

(தி-07)

## எரிபொருட்களின் விலைகுறைப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று நள்ளிரவு முதல் எரிபொருட்களின் விலை குறைவடைந்துள்ளது.

இதனடிப்படையில் பெற்றோலின் விலை 2ரூபாவாலும், டீசலின் விலை 1ரூபாவாலும், மண்ணெண்ணெயின் விலை 2ரூபாவாலும் குறைவடைந்துள்ளன.

(தி-18)

## தங்குமடம் அமைப்பு

(தாவடி)

இந்து கலாசார அமைச்சின் 1லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அல்லைப்பிட்டி தளையர் காடு இந்து மயானத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் தங்குமடத்தின் கட்டடப் பணிகள் முடியும் தறுவாயில் உள்ளதாகத் தெரிய வருகின்றது.

(தி-117)

## சிறுவர்துஷ்பிரயோக விழிப்புணர்வுச் சுவரொட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி "சிறுவர் துஷ்பிரயோகம் ஒழிக" எனும் கருப்பொருளில் பல்வேறு நிறுவனங்களினாலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

உடல் மற்றும் உளரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளாகும் அல்லது துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படும் சிறுவர்கள் குறித்த தகவல்கள் தெரிந்தால் காலம் தாழ்த்தாது உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு அறிவியுங்கள் என்று அச் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி சுவரொட்டிகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, யுனிசெவ் நிறுவனம், அரச அலுவலகங்கள் மற்றும் பொது நூல் நிலையங்கள் ஆகியவற்றில் இவ் விழிப்புணர்வு சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

(உ-18)

## அச்சுவேலியில் பால் விற்பனை நிலையம்

(வடலியடைப்பு)

அச்சுவேலி பொதுச்சந்தையில் பால் விற்பனை நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையம் அச்சுவேலி, இடைக்காடு, புத்தூர், ஆவரங்கால் ஆகிய பகுதிகளில் ஆடு, மாடு வளர்ப்போரிடம் இருந்து நியாயமான விலையில் பாலைக் கொள்வனவு செய்து விற்பனை செய்து வருகிறது.

இதனால் இப் பகுதிகளில் தற்போது ஆடு, மாடுகள் வளர்ப்பதில் மக்கள் நாட்டம் காட்டி வருகின்றனர்.

(உ-21)

## நுணாவில் பகுதியில் விவசாய நடவடிக்கை

(தனங்கிளப்பு)

தற்போது பெய்துள்ள மழையினையடுத்து கண்டிவீதியின் தெற்குப் புறமாகவுள்ள நுணாவில் பகுதியில் விவசாயம் செய்வதற்கான முனமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக புகையிரத வீதிக்கு வடக்காகவுள்ள விவசாய நிலங்களே தற்போது விவசாயம்செய்ய அனுமதிக்கப்பட்டு விவசாய முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, இப்பகுதியில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பிரதேசத்தில் ஆயிரம் ஏக்கா விவசாய நிலங்களில் பயிர் செய்வதற்கு அனுமதி வழங்கப்படுமென படையினா் உறுதியளித்தபோதும் சம்பந்தப்பட்ட பகுதிக்கு விவசாயிகள் எவரையும் பயிர்செய்ய அனுமதிக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-37)

## ஆசிரியர்தின விழா

(தாவடி)

யாழ்.ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்கமும், நல்லூர்க்கோட்ட அரிமாக் கழகமும் ஒன்றிணைந்து இன்று மு.ப.10.45ற்கு வித்தியாலய மண்டபத்தில் ஆசிரியர் தினவிழாவைக் கொண்டாடவுள்ளது.(தி-117)

## வாய்த் தகராறு காதுக்கடியில் முடிந்தது

(தாவடி)


தந்தைக்கும் மகனுக்கும் ஏற்பட்ட வாய்த்தகராறு இறுதியில் காதுக்கடியில் வந்து முடிந்துள்ளது.

சுன்னாகம் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற மேற்படி விநோதச சம்பவத்தில் தந்தையின் காதைக் கடித்து காயப்படுத்திய மகன் சுன்னாகம் பொலிஸாரினால் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார.

அதே சமயம் காதில் காயமடைந்த நிலையில் உள்ள தந்தையார் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(117)

இன வெறிக்கு முதல் ஆப்பு...



## மட்டக்களப்பு மாவட்டத்தில் 32 இடங்களில் கண்ணிவெடி அகற்றும் பணி தொடங்கும்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கென தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவு செய்த 45 பேருக்கு ஒரு மாதகால பயிற்சிகளை வழங்கவுள்ளது.

இம்மாவட்டத்தில் 32 இடங்களில் நிலக்கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது.

மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரே இக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

இப்பணிகள் பூர்த்தியடைந்ததும் எல்லைப்புற கிராமங்களில் மக்களை மீளக் குடியமர்த்தும் பணிகள் துரிதப்படுத்தப்படவுள்ளன.

(தி-61)

## இஸ்லாமிய மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாக ஹக்கீம்

(கொழும்பு)

மலேசியா புததரஜாயாவில் எதிர்வரும் 16ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ள 10வது இஸ்லாமிய மாநாட்டில் பிரதமரின் விசேட பிரதிநிதியாக துறைமுக மற்றும் கிழக்கு மாகாண முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப்ஹக்கீம் கலந்து கொள்ளவுள்ளார்.

இம் மாநாட்டில் பங்குபற்றும் படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை மலேசியப் பிரதமர் மகதீர் முகமட் கேட்டுக்கொண்டதற்கிணங்க ரவூப் ஹக்கீமை தனது விசேட பிரதிநிதியாக இம் மாநாட்டிற்கு அனுப்புவதாகவும் இலங்கையின் பிரதிநிதி ஒரு முஸ்லிமாக இருப்பது மிகவும் பொருத்தமானது என தான் நம்புவதாகவும் ரணில் விக்கிரமசிங்கா மலேசியப் பிரதமருக்கு தெரிவித்துள்ளார்.

இலங்கை-மலேசியப் பிரதமர்கள் சமீபத்தில் சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் பற்றிய பேச்சுக்களை நடத்தியதன் பிரகாரமே இம் மாநாட்டிற்காக இலங்கை முதல் தடவையாக அழைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மலேசியாவிற்குச் செல்லவுள்ள அமைச்சர் ஹக்கீம் மேற்படி மாநாட்டின் போது இலங்கையையும் நிரந்தர உறுப்புரிமை நாடாகச் சேர்த்துக் கொள்வது தொடர்பாக அங்குள்ள தலைவர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தவுள்ளார்.

(தி-06)

## பொலிஸ்நிலைய மரணங்கள் பற்றிய விசாரணைகளை வேறு நிலையம் நடத்த வேண்டும்

### பிரதம நீதியரசர் யோசனை

(கொழும்பு)

பொலிஸ்நிலையத்தில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளின் மரணம் தொடர்பான விசாரணைகளை அதே நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகளால் நடத்த முடியாது என பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

இத்தகைய சூழ்நிலையில், விசாரணைகள் மற்றொரு பொலிஸ் நிலையத்திற்கு மாற்றப்பட வேண்டு மென்று குறிப்பிட்ட அவர்,

பொலிஸ் நிலையத்தில் ஒருவர் மரணமடைந்தால் அதுபற்றிய சகல விபரங்களையும் சட்டமா அதிபர் உடன் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்றும், மரணம் எவ்வாறு சம்பவித்தது என்பது பற்றி சம்பந்தப்பட்ட பொலிஸ்நிலையத்தில் விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இருந்தபோதிலும் விளக்க மறியல் கைதிகளின் பாதுகாப்பிற்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளே பொறுப்பு என அவர் மேலும் தெரிவித்தார்.

(தி-60,10)

நாளை வலம்புரியில்வெளிவருகிறது

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா/த) வினாத்தாள்

விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்

ஆக்கம்: திரு.செ.அன்ரன் (அதிபர்) மயிலிட்டி றோ.க.த. பாடசாலை

## இன்று ஒரு தகவல்

# ஒவ்வாமை

எனக்குத்தெரிந்த ஒருவர் இறப்பர் செருப்பைக் கண்டால் இறப்பர் மாதிரித் துள்ளித்துள்ளி ஓடுவார். ''என்ன விஷயம்?'' என்று விசாரித்தேன். ''இறப்பர் எனக்கு ஒத்துக்கொள்ளாது அலர்ஜி'' என்றார். சிலர் உணவில் நல்லெண்ணை சேர்த்துக் கொண்டால் கடிக்க ஆரம்பித்துவிடும். ''ஒரு மனிதனுக்கு உணவு. அதுவே இன்னொருவனுக்கு விஷம்'' என்று கூறியுள்ளார் லுக்ரிஷியன் என்று ஓர் விஞ்ஞானி . முதல் நூற்றாண்டுகளிலேயே அவர் இதைக் கூறியுள்ளார். அலர்ஜி பற்றி முதலில் கூறப்பட்ட கருத்து இது தான்.

தற்போதுள்ள மருத்துவ அறிஞர்கள் அலர்ஜிக்கு என்ன விளக்கம் கொடுக்கின்றனர் தெரியுமா? ஒரு மனிதன் தன்னைச் சுற்றியுள்ள அபாயமில்லாத சில பொருட்களுடன் சிறிது மாறுபட்ட நிலையில் கூட அதிகப் பாதிப்பு அடைவது அதாவது Hyper Sensitivity என்று கூறுகின்றனர். அதாவது உடலின் இயல்போடு ஒத்துக்கொள்ளாத சில பொருட்களால் ஏற்படும் பாதிப்பு அலர்ஜி. இந்தப்பாதிப்பு எமது உடலில் எத்தனையோ விதமாக இருக்கும். பொதுவாக சரும பாதிப்பு அதிகம். ஆஸ்மா அலர்ஜியினால் வருவது தான். உண்ணும் உணவுகள் காரணமாக அலர்ஜி ஏற்படுவது ஒரு வகை. வேறு வகையாகவும் இது வரலாம்.

காற்றிலுள்ள தூசு, தும்பு இவற்றைச் சுவாசிப்பதனால் சிலருக்கு அலர்ஜிவரலாம். நாய்க்குடைக்காளனில் உண்டாகும் ஒரு வகை கிருமிகள் கூட அலர்ஜிக்கு ஆதாரமாக அமைவது உண்டு. கழுதை, குதிரை, நாய் போன்றவற்றின் கிருமிகளும் அலர்ஜியை உண்டாக்கும். சில வகையான இரசாயனப் பொருட்கள், பென்சிலின், ஸ்ட்ரெப்டோ மைசின், அஸ்பிரின் இவற்றினாலும் வரலாம்.

உதட்டுச்சாயம், முகப்பவுடர், முகத்தில் பூசும்கிரீம், சவர்க்காரம் கூந்தல் தைலம் என்பவை சிலருக்கு ஒத்துக்கொள்வதில்லை. இதை எடுத்துக் கூறி ''இது உனக்கு ஒத்துக்கொள்ளாது. அதனால் இது வேண்டாம்'' என்று கூறினால் சிலர் அதை ஒத்துக்கொள்வதில்லை. சிலருக்கு டெர்லின் துணி ஒத்துக் கொள்ளாது. பிளாஸ்ரிக் போன்றவை சிலருக்கு ஒத்துக்கொள்ளாது.

அலர்ஜி ஏற்படுவதற்கான காரணம் எல்லோருக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை. பொதுவாக மனித உடலிலுள்ளே புகக்கூடிய எந்த நச்சுப்பொருளையும் எதிர்த்து அழிக்கக்கூடிய அணுக்கள் - Antibodies உள்ளன. இவை நம் உடலினுள் வேறு ஏதாவது நச்சுப்பொருள் அல்லது நச்சுக்கிருமி புகுந்தால் உடனே அதை அழித்து வெளியேற்றி விடும்.

ஆனால் சிலரது உடலில் என்ன நடக்கின்றது தெரியுமா? நச்சு எதிர்ப்பு அணு உடலை நச்சுக்கிருமியிடம் இருந்து காப்பாற்றுவதற்குப் பதிலாக அலர்ஜின்களுக்கு உதவியாக மாறி விடுகின்றது. எம்மில் சிலர் செய்வது போன்று அது அலர்ஜியாக மாறி விடும். எதிரி காலில் விழுந்து விடுவார்கள் அல்லவா அது போல்.

இந்த நச்சு எதிர்ப்பு அணுவுக்கு (Reagin)''ரியகின்'' என்று பெயர். ஆஸ்மா போன்ற அலர்ஜி குளிர்காலத்தில் தான் அதிகமாக இருக்கும். சிலவித அலர்ஜி உயிருக்கே ஆபத்தாகி விடும். மருத்துவ உலகில் அலர்ஜியை இரு விதமாகப் பிரிக்கின்றனர். திடீர் என்று நோயை உண்டாக்குவது ஒருவகை அலர்ஜி. இன்னுமோர் வகை முதன் முதலில் உடம்பில் சேரும் அலர்ஜிகளால் எந்த வியாதியும் வருவதில்லை. இரண்டாவது தடவையும் அலர்ஜின்களால் பாதிப்பு ஏற்பட்ட பின்பு தான் நோயின் அறிகுறிகள் 'வெளியே தெரியும்.

அலர்ஜி ஏற்படுவதற்குப் பல காரணங்களைக் கூறுவார்கள். மனதில் ஏற்படும் காரணமற்ற பீதி கூட அலர்ஜியை உருவாக்கி விடுமாம். அதனால் எல்லோரும் எப்போதும் தைரியமாக இருங்கள். அலர்ஜியினால் உண்டாகும் நோயைத் தற்காலிகமாக குணப்படுத்தலாம்.

எந்தப்பொருள் நமது உடலுக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்பது விளங்கிக்கொண்டு அதைத் தவிர்த்துக்கொள்வது தான் விவேகம். சில குடும்பத்தலைவிகள் இந்த விடயத்தில் மிகுந்த புத்திசாலித்தனமாகச் செயற்படுவார்கள். குடும்ப அங்கத்தவர்களுக்கு எவை ஒத்துக்கொள்ளும், எவை ஒத்துக்கொள்ளாது என மிக நுணுக்கமாகத் தெரிந்து வைத்திருப்பர்.

எனக்குத் தெரிந்த ஒரு பெண் உடைகள் வாங்க வேண்டும் என்றால், கணவரை அழைத்துச் செல்வதில்லை. ஏனென்றால் பற்றுச் சீட்டைப் பார்த்தால் அவருக்கு அலர்ஜி வந்து விடுமாம். கணவர் மீது இவருக்கு அவ்வளவு அக்கறை .

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# ஜூலை கலவரத்தில் வேலையிழந்தோர்
# ஐ.நா. சபை செயலருக்கு அறிக்கை

(கொழும்பு)

தொடர்ந்து 23 வருடங்களாக அரசாங்கத்தால் தமது மனித உரிமைகள் மீறப்பட்டு வருவதாக குற்றம் சாட்டி 1980ஆம்ஆண்டு ஜூலை வேலை நிறுத்த சங்கங்களின் கூட்டமைப்பு, ஐ.நா. பொதுச்செயலாளர் கோபி அனானுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

அதில் கோபி அனானின் இலங்கை விஜயத்தின் போது 1980 ஜூலை வேலை நிறுத்தத்தால் பாதிக் கப்பட்டவர்களின் துயர் தீர்க்க உடன் நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கு மாறும் கோரப்பட்டுள்ளது.

1980 ஜூலை வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிட்டத்தட்ட 7 ஆயிரம் பேர் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக எதிர்வரும் ஒக்டோபர் 10 ஆம்திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக இவ் அமைப்பின் செயலாளர் கே. மில்ரன் சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வரவு செலவு திட்டத்தின் மூலமாவது மேற்படி பிரச்சினையைத தீர்க்க அரசிற்கு அழுத்தம் கொடுக்குமாறு ஐ.நா செயலாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரவே இந்தநடவடிககை எடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

கோபிஅனான் எதிர்வரும ஒக்ரோபர் 10 ஆம்திகதி அன்று இலங்கைக்கு விஜயம் செய்ய திட்டமிட்டிருப்பது தெரிந்ததே.

வேலை நிறுத்தம் முறியடிக்கப்பட்டதை தொடர்ந்து ஏற்பட்ட விரக்தி நிலை காரணமாக நூற்றுக்காணக்கானோர் தற்கொலை செய்து கொண்டது பற்றியும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான அங்கத்தவர்களைக்கொண்டிருக்கும் இச்சங்கத்தின் உறுப்பினர்கள் வேலை நிறுத்தத்தால் தமது வேலைகளை இழந்தவர்களாவார்கள்.

தாம் பல போராட்டங்களை மேற்கொண்டிருந்ததாகவும் சட்டநடவடிக்கைகளையும் எடுத்திருந்ததாகவும் இவ்விடயம்தொடர்பாக மனித உரிமைகள்அமைப்பின் கவனததிற்கும் கொண்டு வந்திருப்பதாகவும் இக்கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் கே.மில்ரன் சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (உ-6)

# ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களை உடன் நியமிக்க வேண்டும்

## யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளின் நிலைமைகளைப் புரிந்து கொண்டு, பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியேறிய கால மூப்பின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பாக உரிய அதிகாரிகளிற்குப் பணிப்பதோடு, வேலையற்று இருக்கும் ஏனைய பட்டதாரிகளை வேறு திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமணங்களை வழங்க வேண்டும்.

இவ்வாறு யாழ. மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் தொழில் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள்,யாழ். அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள மேற்படி அறிக்கையில் மேலும்,

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளை தங்களுக்கு வேதனையுடன் அறியத்தருவதுடன், மனிதாபிமானத்துடன் கூடிய இரக்க சிந்தனையுடன் தங்களிடம் தகுந்த பதிலையும் எதிர்பார்க்கின்றோம்.

அரசு தற்காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல்கலைக் கழகங்களை நிறுவி மேலும் மேலும் உயர்கல்வியைத் தொடர்வதற்கான சந் தர்ப்பங்களை வழங்கிவருகின்றது.

பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர்கின்ற மாணவர்கள் கடுமையாக உழைப்பது தாம் கற்ற கல்விக்கேற்ற வேலை வாய்ப்புப் பெற்று தமது அன்றாட வாழ்க்கையை நடாத்துவதற்காகும். இதுவே ஒவ்வொரு பட்டதாரியினதும் எதிர்பாப்பாகும்.

இந்த வகையில், ஒவ்வொரு பட்டதாரிக்கும் உரிய தகைமைக்கேற்ப வேலை வாய்ப்பை கொடுப்பது ஒவ்வொரு அரசாங்கத்தினதும் கடமை என்பது தாழ்மையான சிந்தனையாகும்.

ஆனால் பல வாக்குறுதியைக் கொடுத்து அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னா, மக்கள் குறித்த கரிசனையற்ற நிலை எமக்கு வேதனையை அளிக்கின்றது.

கடந்த காலங்களில் நாட்டில் பதவிக்கு வந்த அரசாங்கமானது நன்கு திட்டமிட்ட முறையில் நாட்டில் செயற்றிட்டங்களை மேற்கொண்டதாக எமக்குத்தோன்றவில்லை. இதன விளைவாகவே நாட்டில் பாரிய அளவில் வேலையற்ற பட்டதாரிகள் தொகை அதிகரித்துள்ளது.

குறிப்பாக வடக்கு -கிழக்கு மாகாணங்களில் 1998முதல் 2002ஆம் ஆண்டு வரையான கல்வி ஆண்டில் இருந்து வெளியேறிய சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கின்றார்கள்.இந்த வகையில் வடக்கில் அரச திணைக்களங்கள் உதாரணமாக மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், பாடசாலைகள் மற்றும் மேலும பல அரச திணைக்களங்களில வெற்றிடங்கள் உள்ளதை நாம் அறிகின்றோம்.

உதாரணமாக வடக்கு-கிழக்கிலுள்ள அரச பாடசாலைகளில் மூவாயிரம் ஆசிரியகள் வெற்றிடங்கள் உண்டென்பதை நாம் அறிகின்றோம் என்றுள்ளது. (உ)

## இராசி பலன்

**06.10.2003**

**(புரட்டாதி 19,திங்கள்)**

**ஏகாதசி- ந.ப. 12.07வரை**
**அவிட்டம்- மு.இ. 11.37 வரை**
**இராகுகாலம்- 7.32 - 9.02**
**சுபநேரம்- 12.02 - 1.32**
**ஏகாதசி விரதம்**

**மேடம்**
குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும், பொருள்சேர்க்கை, பெருமையடைதல்

**இடபம்**
அதிகாரம், நல்ல முயற்சி, போசன சுகம், நல்ல வரவேற்பு

**மிதுனம்**
கட்டுப்படுதல், வீண் அலைச்சல், உறவினர் வருகை, காரியதாமதம்.

**கடகம்**
அமைதிக்குறைவு, முயற்சி தாமதம், ஆரோக்கியக் குறைவு, போசன சுகம்.

**சிங்கம்**
நல்ல வரவேற்பு, காரிய அனுகூலம், விருந்துபசாரம், புதிய பொருள் சேர்க்கை

**கன்னி**
புதிய திட்டமிடல், வசீகரம், தொழில் நன்மை, காரிய சித்தி.

**துலாம்**
வியாபார நன்மை, அமைதிக்குறைவு, காரிய தாமதம், போசன சுகம்

**விருச்சிகம்**
மாதாசுகம், புதிய விடயம், முயற்சி தாமதம், மனப்பதற்றம்

**தனுசு**
பிரயாண நன்மை, கூட்டு முயற்சி, தனவரவு, நல்ல சம்பவம்.

**மகரம்**
விதண்டாவாதம், அதிக செலவு, காரிய தாமதம், வேலைக் கஷ்டம்.

**கும்பம்**
சிந்தனை மிகுதி, ஜனவசியம், எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம்.

**மீனம்**
உணர்ச்சிவசப்படல், சுபசெலவு, முயற்சி தாமதம், சயனசுகக்குறைவு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# புன்னாலைக்கட்டுவன் தெற்கில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்தியில் சைக்கிள் திருட்டுகள் அதிகரித்து வருகின்றன.

ஏழாலை,புன்னாலைக்கட்டுவன்,குப்பிளான் போன்ற இடங்களில் இருந்து வரும் பயணிகள் தமது சைக்கிள்களை இச்சந்தியில் நிறுத்திவிட்டே பஸ் பிரயாணம் செயகின்றனர்.

இவ்வாறு பயணிகளால் நிறுத்தி வைக்கப்படும் சைக்கிள்களே திருட்டுப்போகின்றன.

மேற்படி இடங்களுக்கு பஸ் சேவை ஒழுங்காக நடத்தப்படாத காரணத்தால் பயணிகள் தமது சைக்கிள்களை இச்சந்தியில் விட்டு விட்டுப் பிரயாணம் செய்ய நேரிடுகிறது. (தி-20)

# பேச்சுக்களில் இருந்து ஜே.வி.பி~ஸ்ரீ.சு.க.விலகல்

## புதிய இடது சாரி முன்னணிகுற்றச்சாட்டு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிட்டகாலம் தொடக்கம் இவ்விரு கட்சிகளும் சமாதானப் பேச்சுக்களில் இருந்து விலகியுள்ளன.

இவ்வாறு புதிய இடதுசாரிக் கட்சியின் தலைவர் விக்கிரம பாகு கருணாரட்ண தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், தமிழீழவிடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருக்காமல், மக்கள் விடுதலை முன்னணியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பேச்சுக்களை நடத்தியதனாலேயே நிலைமை மோசமடைந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளை மேற்கொள்ளாமல் எந்தவொரு கட்சியினருடனும் பேச்சுவார்த்தை நடத்துவது முற்றிலும் வீணான செயல். (தி-60)

> எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு - குறள்

# வலம்புரி

## ஆசிரியர் தினம்

இன்று உலக ஆசிரியர் தினம். எழுத்தறிவித்தவன் இறைவன் எனப்போற்றும் உயரிய பண்பு தமிழர் பண்பு. வித்தைகளைக் கற்றுத் தருகின்ற குருவை வணங்கி, அவரின் ஆசி பெறுகின்ற உயர்ந்த பண்பிற்குச் சொந்தக்காரர்கள் நாம். அதனால், குருவழிபாடு, குரு வணக்கம் என்பது எமது வாழ்வியலோடு தொடர்புபட்ட அம்சமாகும்.

எனினும் சமகால நிலைமைகள் குருவணக்கத்தில் ஒரு தொய்வுநிலையைக் காட்டிநிற்கின்றன. ஆசிரியர்களை மதிக்காத-ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படியாத மாணவ சமூகம் உருவாகி வருவது எமது உயர் பண்பாட்டின் கனதிக்கு ஏற்பட்ட ஒரு சோதனை என்றே கூற வேண்டும். ஆசிரியர்-மாணவர் உறவு தெய்வீகமானது. ஆசிரியரின் வழிகாட்டல், மாணவனை நல் மனிதனாக மிளிர வைப்பது. எந்த உறவுகளில் விரிசல்கள், முறிவுகள் ஏற்பட்டாலும் ஆசிரிய-மாணவ உறவின் புனிதத்தில், அதன் மகிமையில் எந்தத் தழும்பும் ஏற்படலாகாது. இத்தகையதொரு கருமை ஏற்படுமாயின் அது முழுச் சமூகத்திலுமே பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

ஒரு காலத்தில் குருகுலக் கல்வி முறை நிலவியது. இக்காலத்தில் குரு-சிஷ்ய உறவு மிகவும் வணக்கத்துக்குரிய உறவாகப் போற்றப்பட்டது. எனினும் காலத்தின் அசைவு கல்வியியலில் ஏற்பட்ட படிமுறை வளர்ச்சி காரணமாக வகுப்பறைக் கல்வி முறைமைகள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன. நிறுவனமயப் படுத்தப்பட்ட பயிற்சி நிலையங்களூடாக உருவாக்கப்பட்ட ஆசிரியர் -முறைமை வகுப்பறைக் கல்வியோடு இணைக்கப்பட்டது. இதன் பின்னர் ஆசிரியர்-மாணவர் முறைமை நடைமுறையில் நிலைபெறலாயிற்று. இத்தகையதோர் முறைமையிலும் நிறைந்த மதிப்பு போற்றப்பட்டதாயினும் சம காலத்தில் அதில் ஓர் தொய்வு ஏற்பட்டுள்ளமையை கல்வியாளர்கள் அவதானித்துள்ளனர்.

இவ்வாறு ஆசிரிய மாணவர் உறவில் ஏற்பட்டுள்ள மதிப்பு குறைவுறுவது தவிர்க்கப்பட வேண்டும். தடுக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் அஞ்ஞானம் என்ற இருளை அகற்றுகின்ற ஒளி விளக்குகள். அவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள்-மதிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு மாணவர்கள் வழங்குகின்ற மதிப்பு கல்விக்கு வழங்குகின்ற மதிப்பாகவே கருதப்படும். அதேவேளை, ஆசிரியர்கள் என்போர் தமது பொறுப்பிலுள்ள மாணவர்களை ஆளுமைமிக்க பிரஜைகளாக உருவாக்கிவிடும் பொறுப்பைக் கொண்டவர்கள். இதிலிருந்து அவர்கள் விலகி விடுவார்களானால பெரும்பழி செய்தவர்களாகவே கருதப்படுவர். எனவே, ஆசிரியர்களும் மாணவர்களும் தம் தம் கடமைகளை பூரணமாக நிறைவேற்ற இந் நாளில் சங்கற்பம் செய்யவேண்டும்.

## முன்னாள் யு.எஸ்.தூதுவர் வழங்கியிருந்த

# யாழ். நூலகத்திற்கான ஆவணப்பொதிகளை புதிய தூதுவரிடம் கையளித்தார் கதிர்காமர்

(கொழும்பு)

முன்னாள் அமெரிக்கத் தூதுவர் அஷ்லே வில்ஸினால் பாதுகாப்பு நிமித்தம் தம்மிடம் ஒப்படைத்திருந்த யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கான மைக்ரோப்பிலிம் மற்றும் உபகரணங்களும் ஆவணங்களும் அடங்கிய பல பொதிகளை முன்னாள் இலங்கை வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் புதிய அமெரிக்கத் தூதுவர் ஜெவ்லன்ஸ்டடிடம் கையளித்தார்.

முன்னாள் அமெரிக்கத் தூதுவர் இலங்கையைவிட்டுச் செல்லும் போது, யாழ்ப்பாண பொதுநூலகத்திற்கென அமெரிக்கக் காங்கிரஸ் சபையின் நூலகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட நுண்படச் சுருள்கள் மற்றும் ஆவணங்களைக் கொடுத்து விட்டுச் சென்றார். இவை மோர்னிங் ஸ்ரார் (உதயதாரகை), ஹின்டு ஓர்கன் (இந்துசாதனம்) யாழ்ப்பாண இந்துஸ்தான், ஈழகேசரி போன்ற வெளியீடுகள் தொடர்பானவை. தமிழ் இலக்கியத்தின் விலை மதிக்கமுடியாத எழுத்துப் பிரதிகளின் தொகையும் இதில் அடங்கும் என்று கையளிப்பு நிகழ்வின் போது கதிர்காமர் கூறினார்.

இந்த ஆவணப்பொதிகளை கையளிக்கும் படி பலர் தம்மிடம் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், அமெரிக்கத் தூதரகத்திடமே அவைகளை கையளித்து விடுவதற்கு தாம் தீர்மானித்தாகவும், இனி அவை யாழ்ப்பாணத்தில் பொறுப்புள்ள அதிகார அமைப்பிடம் கையளிக்கப்படுவதற்கும் வசதியாக இருக்கும் என்றும் கதிர்காமர் கூறினார்.

இந்த வைபவத்தில் அமெரிக்காவின் புதிய தூதுவர் கருத்து வெளியிடுகையில், யாழ்ப்பாணம் நூலகத்தின் ஆவண உபகரணங்களை மீளளிப்பதானது, ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ இலங்கையின் சரித்திர பாரம்பரியத்தின் ஒரு பகுதியை அமெரிக்கா இலங்கைக்கு மீளளிப்பதாக அமையும் என்றார். (பி)

## சவுதிஅரேபியா பேரீச்சம்பழம் அன்பளிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களுக்கென சவுதிஅரேபிய அரசாங்கம் 17 ஆயிரம் கிலோகிராம் பேரீச்சம் பழங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள புனித ரம்ழான் நோன்பு தினத்தை முன்னிட்டே இப்பேரீச்சம்பழங்கள் வழங்கப்படவுள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், வீடமைப்பு பிரதியமைச்சருமான வசீர் சேகுதாவு மேற்கொண்ட முயற்சியின் பயனாகவே இவை கிடைக்கப் பெறவுள்ளன.

(தி-61)

# சிறுபான்மைக் கட்சிகளின் ஒன்றிணைவு மூலம் விரைவில் ஆட்சி மாற்றம் வரும்

### மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை

(கொழும்பு)

சிறுபான்மைக் கட்சிகள் அனைத்தையும் ஒன்றுசேர்த்து விரைவில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நுவரெலியா மாவட்டத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின், நுவரெலியா மாவட்ட கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இனவாதக் கட்சியென ஒருசிலர் கூறிவருகின்றனா. ஆனால் எமது கட்சி இனவாதக் கட்சியல்ல. இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முதலில் செயற்பட்டவர் எமது ஜனாதிபதியே என அவர் மேலும் தெரிவித்தார். (தி-61,10)

## வலிகாமம் கல்வி வலய பாவோதல் போட்டி முடிவுகள்

(கந்தரோடை)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளிடையே நடாத்தப்பட்ட சகலகலாவல்லி பாமாலை ஓதல் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவற்றின் விபரம் வருமாறு:-

**ஆண்கள் (பிரிவு I)**

முதலாம் இடம்-ஜெ.ரஜீவன்-யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
இரண்டாம் இடம்- யோ.மாதவன்-யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்
மூன்றாம் இடம்- அ.சரவணன்-யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்

**பிரிவு II**

முதலாம் இடம்- சு.கபிலன்- யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
இரண்டாம் இடம்-சு.ஸ்ரீவரன்- யா/ஸ்வந்தவரோதயக் கல்லூரி
மூன்றாம் இடம்-வே.கஜந்தன்-யா/மகாஜனக் கல்லூரி

**பெண்கள் (பிரிவு I)**

முதலாம் இடம்- வி.ஜீவிகா- யா/யூனியன் கல்லூரி
இரண்டாம் இடம்-கி.வாசுகி-யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி
மூன்றாம் இடம்- ஜெ.வைஸ்ணவி-யா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

**பிரிவு II**

முதலாம் இடம்- ர யாழினி- யா/விக்ரோறியாக் கல்லூரி
இரண்டாம் இடம்-த.நிஷா-யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி
மூன்றாம் இடம்-மோ.மஜிதா யா/வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்.

(தி-103)

## தென்மராட்சியில் 6 இடங்களுக்கு 24 மணிநேர மின்சாரம்

(மந்துவில்)

தென்மராட்சிப் பிரதேசத்திற்கு 24 மணிநேரமும் மின்சாரம் நேற்று முன்தினம் முதல் வழங்கப்படுகிறது.

மேற்படி பிரதேசத்திலுள்ள கைதடி, நுணாவில், சாவகச்சேரி, அரசடி, மீசாலை மற்றும் கொடிகாமம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மின்பிறப்பாக்கிகளை நேற்று முன்தினம் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் மற்றும் இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோர் வைபவ ரீதியாக இயக்கி மின்விநியோகத்தை ஆரம்பித்து வைத்தனா.

இந்நிகழ்வில், மின்சார சபை முகாமையாளர் முத்து இரத்தினானந்தம், மின் பொறியியலாளர் எஸ்.அமிர்தலிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

பல வருடங்களுக்கு பின்னர் மேற்படி பகுதிகளுக்கு தற்போது நாள் முழுவதுமான மின்சாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-54)

## புரிந்துணர்வு உடன்படிக்கையில்

# கையெழுத்துப் போட்டால் மாத்திரம் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது

### ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலமாகவே தீர்வு கிடைக்கவேண்டும் என தான் நம்புவதாகவும்,பிரார்த்திப்பதாகவும் ஜனாதிப்தி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் இடம்பெற்ற கொழும்பு றோயல் கல்லூரியின் 159 ஆவது வருடாந்த பரிசளிப்பு வீழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசும் போது தெரிவித்தார். மேலும் மக்களின் மனங்களில் ஒரு மாற்றம் ஏற்படாமல் இது நடைபெறமுடியாது என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், கீறிட்ட இடங்களில் ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டால் மட்டும் இனப்பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்குரிய தீர்வாக அமையாது. சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புள்ள,சுயநலமற்ற தலைவர்களே தேவை. ஆனால், அத்தகையோர் பற்றாக்குறையாக இருப்பது கவலைக்குரிய விடயம் என்றார்.

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் வாழ்க்கைத் திறன் என்னும் பாடத்தை அறிமுகம் செய்திருந்தது. ஆனால்,தற்போதைய அரசாங்கம் இன்னும் அவ்வாறானதொன்றை அமுல் செய்யவில்லை. ஒரு வேளை நான் அறிமுகப்படுத்தியதால்தான் இன்னமும் அமுல் செய்யப்படவில்லைப் போலும்.

எனது பிள்ளைகள் பள்ளிப் படிப்பை முடித்து விட்டார்கள். தற்போது உங்கள் பிள்ளைகளே இதன் மூலம் நன்மை பெற முடியாது உள்ளனர். வாழ்க்கைத்திறன் பாடத்தை அறிமுகப்படுத்த நான் உலக வங்கியிடம் பெருமளவு கடன் வாங்கியிருந்தேன் என அவர் மேலும் தெரிவித்தார். (தி-06)

## ஓம் தினசரி தியானம் உள்ளுக்குள்

மகிழ்ச்சி, ஓய்வு, நிம்மதி எல்லாம் உங்களுக்குள்ளே இருக்கின்றது, எனவே ஆன்மீகத்தை நாடுபவர் தன்னுள் நோக்க வேண்டும். அவர் ஒன்றை எல்லாவற்றிலும, எல்லாவற்றையும் ஒன்றிலும் காணும் சம நோக்குடையவராக இருக்க வேண்டும். உயர்ந்தது, தாழ்ந்தது என்று வேற்றுமை பாராட்டக்கூடாது.

சுவாமி சிவானந்தர்

## மாந்தை உப்பளத்தால் உவர்நீராகும் கிணறுகள

(யாழ்ப்பாணம்)

செம்மணி மாந்தை உப்பு ஸ்தாபனத்தின் உப்பளத்திட்டத்தை உடனடியாக கைவிடுமாறு கோப்பாய் தெற்கு மக்கள் யாழ்.அரசஅதிபரிடமும், வலிகிழக்கு பிரதேசசெயலரிடமும் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

மேற்படி உப்பு ஸ்தாபனத்தின் வேலைத்திட்டங்களால் கோப்பாய் தெற்கு பிரதேசத்தின் விளை நிலங்கள் உவர் நிலங்களாக மாறுவதுடன், நன்நீர்க் கிணறுகளும் உவர்நீர்க் கிணறுகளாக மாறிவருவதைத் தொடர்ந்து, இப்பகுதி மக்கள் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இவ்வாறு விளைநிலங்களும் குடிநீர்க் கிணறுகளும் உவர்நீராக மாறிவருவதற்கு இத்தாபனத்தின் உவர் நீர் தேககும் நடவடிக்கையே காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (தி-4,16)

# வன்முறைகளில் இருந்து மக்களை பாதுகாப்பதில் உறுதியாக செயற்பட்டோம்

## கண்காணிப்புக் குழு பிரதிநிதி கிறிஸ்தோபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மடம் சந்திப் பகுதியிலுள்ள இராணுவக் காவல் அரணை அகற்றுமாறு கோரி பொது மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய போது அவர்களது மன உணர்வின் உச்சத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

எனினும், இதன்போது விளைந்த வன்முறைகளில் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினராகிய நாம் மிக விழிப்புடன் செயற்பட்டோம்.

இவ்வாறு இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட துணைத் தலைவர் ஜெஸ்ப்பர் கிறிஸ்தோபர் தெரிவித்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி யாழ். மடம் சந்தியில் நடைபெற்ற இராணுவ வாகன விபத்தில் இளைஞர்கள் இருவர் கொல்லப்பட்டமையினால் அப்பகுதியில் பெரும் களேபரம் ஏற்பட்டமை தெரிந்ததே.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக கண்காணிப்புக் குழுத் துணைத் தலைவர் மேலும் தெரிவித்ததாவது,

விபத்துச் சம்பவத்தினைத் தொடர்ந்து பொது மக்கள் தமது உணர்வுகளின் வெளிப்பாடாக நடத்திய போராட்டங்களில்வீதி அதிகாரங்களை தமக்குள் வைத்திருப்போரின் கரங்கள் ஓங்கியிருந்தன.

ஆயினும், போராட்டங்களில் ஈடுபட்ட பொதுமக்களும் சம்பவ இடத்தில் வாழும் பொதுமக்களும் பாதிக்கப்படக் கூடாது என்பதில் நாம் விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட்டோம்.

பொதுமக்களைச் சமாதானப்படுத்தி அமைதிநிலையை உருவாக்க எம்மால் இயன்றவரை நடவடிக்கை எடுத்தோம். இதன் பொருட்டு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினரையும், யாழ்.மாவட்ட இராணுவத்தளபதிகளுடனும் சந்தித்து பேச்சுக்களை நடத்தினோம்.

இதில் இரு தரப்பும் அமைதியை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்தன.

இதனால் தற்போது அமைதியான சூழ்நிலை காணப்பட்டாலும், இன்னமும் பதற்றம் தணியவில்லை. இதனால் மக்களின் மனநிலை பாதிபபடைந்துள்ளது.

இப்பகுதியில் ஏற்பட்ட விபத்து சம்பவங்கள் தொடர்பாக பலர் பாதிக்கப்பட்டுள்ளமையையிட்டு கண்காணிப்புக்குழு மிக்க மன வேதனைப்படுகிறது. எனினும் இம்மக்களிடையே காணப்படும் ஒருமித்த உணர்வும், ஒற்றுமையையும் விட்டுக்கொடுக்கும் தன்மையையும் நிச்சயம் சுமுக நிலையை உருவாக்கும் என்றார்.

அதேவேளை, இக் களேபரம் நீங்கி சுமுகநிலை திரும்ப ஒத்துழைத்த அரசியல்துறையினர் மற்றும் படைத்தரப்புகள், இச் சுமுகநிலை மேலும் தொடர ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (த-4)

# பருத்தித்துறை இறங்கு துறையில் இளைஞர்கள் இருவர் கைது

## இறங்குதுறை ஊழியர்கள் பகிஷ்கரிப்பு

(திருநெல்வேலி)

பருத்தித்துறை இறங்குதுறையில் இரண்டு இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இறங்குதுறையில் அமைந்துள்ள 524 வது படைப்பிரிவினுள் குமரப்பா புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் படங்களை வைத்திருந்ததன் காரணமாகவே இவர்களைக் கைது செய்ததாக இராணுவத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருட்களை இறக்கும் பணியில ஈடுபட்டிருந்த சுப்பர் மடத்தைச் சேர்ந்த யேசு பற்றிக் ராஜ்குமார் (வயது 19), நடராஜா ஜெயகாந்தன் (வயது 18) ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து அங்கு பொருட்களை இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 30க்கும் மேற்பட்ட ஊழியர்கள் தமது வேலைகளைக் கைவிட்டு பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட அனைவரையும் இராணுவம் வெளியே செல்ல விடாது தடுத்து வைத்தது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டு அவர்களை விடுவித்தார்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட இருவரும் இன்று பொலிஸ் நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு கூறிய பொலிஸார் அவர்களை விடுவித்தனர்.

இது இவ்வாறிருக்க, ஊழியர்களின் பகிஷகரிப்பையடுத்து பொருட்களை ஏற்றிவந்த கப்பல் ஒன்று திரும்பிச் சென்றது. (ந-43,23,5)

# 31 ஈழ அகதிகள் நேற்று நெடுந்தீவுக்கு வந்தனர்

(நெடுந்தீவு)

தமிழகத்திலிருந்து ஈழத்தமிழ் அகதிகள் 31 பேர் இந்திய மீன்பிடி றோலர் ஒன்றின் மூலம் நேற்று நெடுந்தீவை வந்தடைந்தனர்.

14 குடும்பங்களைச் சேர்ந்த 31 அகதிகளும் நெடுந்தீவு மேற்கு கடற்கரையை நேற்று அதிகாலை வந்தடைந்தனர்.

நெடுந்தீவைச் சேர்ந்த அகதிகள் அனைவரும் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் தங்க வைக்கப்பட்டு நேற்று மாலையே அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (த-48)

# விடுதலைப் புலிகள் – இராணுவம் வவுணதீவில் இன்று சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று இன்று காலை வவுணதீவு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கிலும், தற்போது அம்மாவட்டத்தில் நிலவிவரும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராயும் முகமாகவுமே இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (தி-61,10)

### அயர்லாந்து...

வல்லுநர்களும் கூடி ஆராய்கின்றனர்.

இடைக்கால நிர்வாகசபைக்கு இறுதி வடிவம் கொடுக்கும் இவ் ஆலோசனைக் கூட்டத்தில் முதற் தடவையாக விடுதலைப் புலிகளின் பெண் உறுப்பினர் தமிழ்விழி, செல்வி மற்றும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா, விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், புலிகளின் சட்டவல்லுநர் உருத்திரகுமார் விஸ்வநாதன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இவர்களைவிட பரிஸ் கூட்டத்தில் கலந்து கொண்ட இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர் சிவாபசுபதி, சிங்கப்பூர் பல்கலைக் கழக சட்டத்துறைப் பேராசிரியர் சொர்ணராஜ் உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் சட்டவல்லுநர்களும் தற்போதைய கலந்துரையாடல்களில் கலந்து கொண்டுள்ளனர்.

இவ்வாறு பரிஸில் தயாரிக்கப்பட்ட சட்டவரைபுக்கு, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வழங்கியிருந்த திருத்தங்கள் குறித்து ஆராய்ந்த பின் அத்திட்டவரைபுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்படும். இதன் பின்னர் வன்னி திரும்பும் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் தலைவர் பிரபாகரனுடன் ஆராய்ந்த பின்னர் தமது திட்டவரைபை நோர்வே அரசின் மூலம் இலங்கை அரசிடம் சமர்ப்பிப்பர். இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் டிசம்பர் அல்லது ஜனவரியில் ஆரம்பிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் திட்டவரைபில் பாதுகாப்பு, காணி, அதிகாரங்களும், நிதி என்பன உள்ளடக்கப்பட்டிருக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும். அது தொடர்பாக விடுதலைப் புலிகள் இரகசியத்தை கடைப்பிடித்து வருவதாகவும், அதேபோல் இலங்கை அரசும் இது தொடர்பான விடயங்களை ,பகிரங்கப்படுத்தாமல் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை நோர்வேயூடாக விடுதலைப்புலிகளிடம் விடுக்கும் என்றும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)

### பன்னிரு...

கடற்புலிகளின் தாக்குதல் பிரிவுத் தளபதிகளில் ஒருவரான சலீம் ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை வட்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றி வைத்தார்.

நினைவுத் தூபியினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான மங்களேஸ் திரை நீக்கம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து 12 வேங்கைகளுக்கான ஈகச்சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டன. தொடர்ந்து மலர் மாலைகளை மாவீரர்களின் பெற்றோரும், உறவினரும் அணிவித்தனர்.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, கடற்புலிகளின் அரசியல் துறைப் பிரமுகர் மறவன் மாஸ்ரர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் உரையாற்றினர். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இதேவேளை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும், கொடிகாமத்திலும் 12 வேங்கைகளினதும் நினைவு தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டன.

கோப்பாயில் காலை 9 மணிக்கு ஆரம்பமான இந் நிகழ்வில் தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் பொறுப்பாளர் சுதாஸ் ஏற்றி வைக்க, ஈகச்சுடரினை கோப்பாய் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் யாழவன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மலர் அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

கொடிகாமம் சந்தியில் பன்னிருவரினதும் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு மக்கள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். அத்துடன் அப்பகுதி எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டு புரட்சி கீதங்களும் இசைக்கப்பட்டன. (ந-5,54,52,27,43)

### பாதுகாப்புச்சபை...

சாதனங்களை கொள்வனவு செய்தல் போன்ற நடவடிக்கைகளில் புலிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அகஸ்தி என்னும் கப்பலில் இந்தோனேசியா துறைமுகத்தில் வைத்து புலிப் போராளி ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது.இந்தக் கப்பலில் நீண்டதூர ஆட்லறி ஏவுகணைகளும், மோட்டார்களும் ஏவுகணைகளும் மற்றும் இராணுவ உபகரணங்களும் ஏற்றப்பட்டிருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந் நிலையிலேயே அரசாங்கம் மேற்படி உயர்பாதுகாப்பு கட்டுப்பாட்டு சட்டவரைபை தயாரித்துள்ளது என அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

# ஆசிரியர்களின் அர்ப்பணிப்பை தமிழ் மண் ஒருபோதும் மறவாது

## புலிகளின் மாணவர் அமைப்பு அறிக்கை

(கிளிநொச்சி)

உலக வரலாற்றில் ஈடு இணையற்ற சேவையாற்றி உயர்ந்த இடத்தைப் பற்றிக் கொண்டவர்கள் ஆசிரியர்கள். மாணவர் சமூகத்தினரால் புனித தெய்வங்களாக மதிக்கப்படும் ஆசிரியர்கள் ஆற்றிய சேவைகள் அளப்பெரியன.

இவ்வாறு உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலக வரலாற்றில் ஈடு இணையற்ற சேவையாற்றி உயர்ந்த இடத்தைப் பற்றிக் கொண்டவர்கள் ஆசிரியர்கள். மாணவர் சமூகத்தினரால் புனித தெய்வங்களாக மதிக்கப்படும் ஆசிரியர்கள் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. ஆளணிப் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை நிலவுகின்ற சூழ்நிலையிலும் மக்கள் இடம்பெயர்ந்து மரங்களின் கீழ் வாழ்ந்த காலங்களிலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும், போரியல் சிந்தனையிலும், அர்ப்பணிப்போடு ஈடுபட்டஆசிரியர் சமூகத்தை தமிழ் மக்கள் உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கின்றனர். சிங்கள அரசு தமிழ் மக்களின் கல்விக்கும் வசதிகளுக்குமான உரிமைகளை மறுத்த போதும் விடா முயற்சி, அர்ப்பணித்த சேவை மூலம் கல்வி உலகில் தமிழ் மாணவர்களை முன் நிலைப்படுத்திய பெருமை எமது ஆசிரியர்களையே சாரும். விடுதலைப் போர் உச்சமடைந்த காலங்களில் களத்தில் வீரவரலாறு படைத்து புதுயுகம் படைத்த ஆசிரியர்களையும் இந் நாளில் நினைவு கூருகின்றோம். போரும் கல்வியும் தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஒன்றிணைந்த போது பாடசாலைகளில் கல்விக்காகவும், களமுனைகளில் மண்ணின் விடுதலைக்காகவும் தியாக உணர்வோடு உழைத்த ஆசிரியர்கள் எம் மண்ணிலேயே உருவாகிய வரலாற்றுப் பெருமை எமக்குண்டு.

எனவே அரசாங்கம் தமிழ் மாணவர்களின் கல்விக்கும், வளங்களிற்குமான சந்தர்ப்பங்களைக் குறைத்த போதெல்லாம் காலமும் நேரமும் பாராது உறுதியுடனும், உணர்வுடனும் செயற்பட்டு எமது மாணவர் சமூகத்தின் விருத்தியிலும், வளர்ச்சியிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஆசிரியர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பாராட்டி கௌரவிக்கும் அதேவேளை, எதிர் வரும் காலங்களிலும் அவர்களின் சேவை மாணவர்களைச் சென்றடைய வாழ்த்துகின்றோம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### கண்காணிப்புக்குழு...

காணிப்புக் குழுவின் யாழ். பிரதிநிதி கொழும்புத் தலைமைக் காரியாலயத்திற்கு விளக்கிக் கூறியுள்ளார்.

இதனையடுத்து மன்னார், வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களில் பணிபுரிந்த கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் நால்வர் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர் அவர்கள் நேற்று முதல் தமது கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். (த-4)



நேற்று இரவு 9.15 மணியளவில் யாழ் மனோகராச் சந்தியில் ஐஸ்கிறீம் வாகனமும், மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகிய போது எடுக்கப்பட்ட படம். படம்: சதீபன்

MEDICAL CHECK UP

வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.